Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/1049)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 16 புதன்கிழமை (02. 11. 2011) பக்கங்கள் 16 ஓசை – 33



சம்பந்தரும் சாப்பாடும் 11


எலிசபெத் மரணமடைந்தால்... 13


ஜீவா காலமானார் 12


இரவு நேரத்திலும் மரதன் 06




## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற யாழ்ப்பாண, கிளிநொச்சி மாவட்டங்களுக்கான அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதுடன், முன் வைக்கப்பட்ட சில கோரிக்கைகள் குறித்தும் உடனடிக் கவனம் செலுத்தப்பட்டது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி ஆகியோரின் இணைத்தலைமையில் இரண்டு மாவட்டங்களுக்கென அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நடைபெற்றது.

இதில் மக்களின் மீள்குடியேற்றம், கண்ணிவெடி அகற்றல், வீதிப் புனரமைப்பு, வீட்டுத் திட்டம், விவசாயம், மீன்பிடி, நீர்ப்பாசனம், மின்சாரம், சுகாதாரம், கல்வி உட்பட பல்வேறு துறைகளின் அபிவிருத்திப் பணிகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டன.

இதன்படி யாழ். மாவட்டத்தின் மண்டைதீவு, வரணிப் பகுதிகளில் பொதுமக்களின் காணிகளிலுள்ள படையினரை அங்கிருந்து விலக்கி அவற்றை மீளவும் பொதுமக்களிடம் வழங்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

எதிர்வரும் (15 ஆம் பக்கம் பார்க்க)

# தீர்வைப் பெற்றுக்கொள்ள உள்நாட்டில் பேசுங்கள்



### கூட்டமைப்பைக் கோருகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கு வெளிநாடுகளுக்கு சுற்றுப் பயணம் செய்வதை விடுத்து, அரசாங்கம் ஐக்கிய தேசியக் கட்சி உட்பட உள்நாட்டு அரசியல் கட்சிகளுடன் பேச்சு நடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வரவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமெரிக்கா சென்று அந்நாட்டு அதிகாரிகள் சிலருடன் பேச்சு நடத்தியுள்ள தமிழத் தேசியக் கூட்டமைப்பினர் கனடாவுக்குச் சென்றுள்ள நிலையில், கூட்டமைப்பின் அமெரிக்கப் பயணம், இலங்கை இந்திய உறவு மற்றும் அரசு கூட்டமைப்பு பேச்சு (15 ஆம் பக்கம் பார்க்க)

## மதில் சரிந்து தொழிலாளி பலி

(மன்னார்)

மன்னார், பேசாலைக் கிராமத்தில் நேற்றுக் காலை தென்பகுதியைச் சேர்ந்த கட்டுமானப் பணியாளர் ஒருவர் மதில் சரிந்து வீழ்ந்ததில் உயிரிழந்துள்ளார்.

சியாம்பலாவ வனமுள்ளை என்ற இடத்தைச் சேர்ந்த புஸ்பகுமார (வயது - 25) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

பேசாலையிலுள்ள வீட்டு மதிலுக்கு அருகாமையில் தோண்டப்பட்ட நீர் வடிகாலமைப்பு கட்டுமானப் பணியில் குறித்த நபர் ஈடுபட்டுக்கொண்டிருந்த போதே அருகிலிருந்த மதில் சரிந்து குறித்த பணியாளர் மீது வீழ்ந்தது. இதன்போது படுகாயமடைந்த குறித்த கட்டுமானப்

(15 ஆம் பக்கம் பார்க்க)

## போர்க்குற்ற விசாரணை ஆலோசிக்கிறதாம் ஐ.நா.

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்ற போதும், போர்க்குற்றங்கள் தொடர்பாக அனைத்துலக விசாரணையை நடத்துவது தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரும் ஆலோசனை நடத்தி வருவதாக ஐ.நா. தகவல் ஒன்று தெரிவித்துள்ளது.

ஐ.நா.வின் பிராந்திய தகவல் நிலையத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் சொந்தமான விசாரணைகளை நடத்தாத நிலையில், வெளியார் தலையிடுவதை விரும்பவில்லை என்றும், அனைத்துலக விசாரணைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருவதாகவும், அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கடந்த செப்ரெம்பர் 12 ஆம் திகதி ஐ.நா. பொதுச்செயலர் (15 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களின் ஏக பிரதிநிதிகளாக கூட்டமைப்பை ஏற்க வேண்டாம்

### ஐ.நா. அதிகாரிகளுக்கு அறிவுறுத்து

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழர்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ள வேண்டாம் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சிறப்புத் தூதுவரும், அமைச்சருமான மகிந்த சமரசிங்க ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் செயலக அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளைச் சந்திக்கவுள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்த நிலையில், அச்சந்திப்பைத் தடுத்து நிறுத்தும் நோக்குடன் அமைச்சர் மகிந்த சமரசிங்க இவ்வாறு கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் (15 ஆம் பக்கம் பார்க்க)

## ஆணைக்குழு அறிக்கை பகிரங்கப்படுத்தப்படும்



(கொழும்பு)

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் அறிக்கை பகிரங்கப்படுத்தப்படும் என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலியாவில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகள் மாநாட்டின் போது இலங்கை அடைந்துள்ள முன்னேற்றங்கள் தொடர்பில் தெளிவுபடுத்துவதற்காக வெளிவிவகார அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

2013 ஆம் ஆண்டில் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் கனடா கலந்து கொள்ளாது என்ற அறிவிப்பு தொடர்பில் ஊடகவியலாளர்கள் இதன் போது கேள்வி எழுப்பினர்.

நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் மாநாட்டின் போது 2013 ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகள் மாநாடு இலங்கையில் நடைபெறவுள்ளமை தொடர்பில் கனேடிய பிரதமர் ஹாபர் எவ்வித (15 ஆம் பக்கம் பார்க்க)

## தந்தை செல்வாவிற்கு. மீண்டும் வந்தது தலை



(கொழும்பு)

தமிழரசுக்கட்சி ஸ்தாபகர் தந்தை செல்வாவின் தூபியில் துண்டிக்கப்பட்ட தலை ஒட்டப்பட்டு சிலை அதே இடத்தில் நேற்று பிற்பகல் 3 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

நகரசபையின் தலைவர் க.செல்வராசாவும் உபதலைவர் சே.சிறிஸ்கந்தராசாவும் சிலைக்கு மாலை அணிவித்தனர்.

பொலிஸ் (15 ஆம் பக்கம் பார்க்க)

# நயினாதீவில் சீரற்ற மின் விநியோகம் மக்களைக் குறை கூறுகிறார் அதிகாரி

(நயினாதீவு)

நயினாதீவு பிரதேசத்தில் அண்மைக்காலமாக திருட்டுத் தனமாக மின்சாரம் பெறுபவர்கள் அதிகரித்திருப்பதாக மின் விநி யோகத்திற்குப் பொறுப்பான அதிகாரி குற்றம் சாட்டுகின்றார்.

கடந்த ஒரு வாரகாலமாக நயினாதீவு பிரதேசத்தில் சீரற்ற மின்சார வழங்கல் இடம்பெற்று வருகின்றது. இது குறித்து மின் அத்தியட்சகருடன் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் வீதியோரங்களில் மரக்கிளைகள் வளர்ந்து மின் விநியோகத்திற்கு இடையூறாக இருப்பதாகவும் அவர் தெரிவித் தார்.

இதேவேளை, சீரற்ற மின் விநியோகத்தால் எதிர்வரும் டிசம் பர் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாண வர்களும், மழைகாலம் ஆரம் பித்து இருப்பதால் பொது மக்க ளும் கடும் சிரமங்களை எதிர் நோக்குவதாக அங்கிருக்கும் மக் கள் தெரிவிக்கின்றனர். (85)

# முன்பள்ளிச் சிறுவர்களின் கண்காட்சி



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை முன் பள்ளிச் சிறார்களின் கண் காட்சி நிகழ்வு நேற்றுக் காலை 10.45 மணியளவில் மாநகரசபை சன சமூக நிலைய அபிவிருத்தி உத்தி யோகத்தர் க.லோகேஸ்வரன் ஏற்பாட்டில் நடைபெற்றது.

மங்கள விளக்கேற்றலு டன் ஆரம்பிக்கப்பட்ட இக் கண்காட்சிக் கூடத்தினை யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ நாடாவெட்டித் திறந்து வைத்தார்.

70 சிறார்கள் கல்வி பயிலும் இம் முன்பள்ளியில் மாணவர்க ளின் ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

இந்நிகழ்வில், யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ, யாழ்.மாநகர சபை செயலாளர் ப.பற்குணராஜா, மாநகரசபை பொது நலத் தொடர்பு உத்தியோகத்தர் சோமசுந்தரம் மற்றும் மாநகர உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண் டனர். (எஸ்)

## யாழ்.போதனா வைத்தியசாலையின்

# லிப்ட் வசதியின்மையால் பெண் நோயாளர் அவதி

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசா லையின் நான்கு மாடிகளைக் கொண்ட பெண்கள் மருத்துவ விடுதிக்கான லிப்ட் வசதியினை மீளமைத்துத் தரும்படி யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளர் பவானி பசுபதிராஜா யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவி டம் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளார்.

யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற யாழ்., கிளிநொச்சி மாவட்டங்க ளின் அபிவிருத்திக் குழுக் கூட் டத்திலேயே அவர் இக் கோரிக் கையை முன்வைத்துள்ளார்.

குறித்த நான்கு மாடிகளைக் கொண்ட பெண்கள் மருத்துவ விடுதிக்கு லிப்ட் வசதி இல்லா ததன் காரணமாக வைத்தியசா லையின் சிற்றூழியர்கள் நோயா ளர்களை கைத்தாங்கலாக தூக் கிக் கொண்டு மேல் மாடிக்கு ஏறி இறங்க வேண்டியுள்ளது.

இதனால் அவர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கும் சூழ லில் நோயாளர்களும் அசௌ கரியங்களுக்கு உட்படுகின்றனர் என்று சுட்டிக் காட்டிய அவர் இதற்கான லிப்ட் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும் மேலதிக உதிரிப்பாகங் கள் தேவைப்படுவதன் காரண மாக இப்பணி தடைப்பட்டிருக் கின்றது. இதனைப் பொருத்தும் பணி இலங்கை மின்சார சபை யிடம் ஒப்படைக்கப்பட்டிருக் கிறது. இதற்கு ஒரு இலட்சம் ரூபா தேவையாகவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் இவ் உதிரிப்பாகங் களை எடுத்து வந்து லிப்ரைப் பொருத்த இன்னும் ஆறு மாதங் கள் செல்லும் எனவும் சுட்டிக்காட் டிய பணிப்பாளர், யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மின்சாரமும் பற்றாக்குறையாக உள்ளதாகவும் தெரிவித்தார். இவ்விடயம் குறித் து வட மாகாண ஆளுநர் நடவ டிக்கை எடுப்பார் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வைத்திய சாலைப் பணிப்பாளரிடம் உறுதி யளித்தார். (பா)

# பழைய இடத்திற்கு பிள்ளையார்

(ஜிவநகர்)

கடந்த மாதம் 3 ஆம் திகதி அன்று ஜிவநகர் அருள்மிகு முத் துமாரி அம்மன் கோவிலில் வைக்கப்பட்டிருந்த 50 கிலோ எடையுடைய பொற் பிள்ளையார் சிலை திருடப்பட்டுச் சென்றுள் ளது.

இதனை முல்லைத்தீவு பொலிஸாரிடம் கோவில் பூசகர் மற்றும் தலைவர், பொருளாளர் அனைவரும் முறைப்பாடு செய் ததையிட்டுத் திருடர்கள் பிடிக்கப் பட்டு பிள்ளையார் சிலை நீதிமன் றில் ஒப்படைக்கப்பட்டது.

குறித்த சிலையை பொறுப் பேற்குமாறு நீதிமன்றினால் அறி விக்கப்பட்டதையிட்டு ஆதாரங் கள் காட்டிஆலயப் பூசகர், நிர்வா கிகள் பெற்றுக்கொண்டனர்.

# கடல்சார் தொழில்நுட்ப இலவசப் பயிற்சி நெறி

(குருநகர்)

யாழ்.இரண்டாம் குறுக்கு வீதி யில் புதிதாக நிறுவப்பட்டுள்ள கடலோட்டு மற்றும் இயந்திரவி யல் கல்லூரியில் முதன் முத லாகப் புதிய கடலகப் பயிற்சி நெறிகளை இலவசமாக வழங்க வுள்ளதாக உதவிப் பணிப்பாளர் இ.செபஸ்தியாம்பிள்ளை தெரி வித்துள்ளார்.

வழங்கப்படவுள்ள பயிற்சி நெறிகளின் விபரங்கள் இவ்விதம் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளியிணைப்பு இயந்திரங் கள் திருத்துதல், பராமரித்தல், மீன்பிடி இயந்திர உதவியாளர், மீன்பிடித் தொழில் நுட்பம், கடல் இயந்திரத் தொழில்நுட்பம், கடல் எல்லையைச் சுட்டிக் காட் டும் தொடர்பாடல் மற்றும் செய் மதி செயற்பாட்டுச் சான்றிதழ்க ளுக்கான பயிற்சி நெறிகளே வழங்கப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறிகளைப் பெற விரும்புவோர் சுயவிபரக் கோவையுடன் விண்ணப்பங்க ளைப் பூர்த்தி செய்து பணிப்பா ளர், கடலோட்டு மற்றும் இயந்திர வியல் கல்லூரி, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் எனும் முக வரிக்கு அனுப்பி வைப்பதன் மூலம் இணைந்து கொள்ளலா மெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (68)

# தேசிய கல்வியியல் கல்லூரிக்கு நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டோர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேசியக் கல்வியியற் கல்லூரிக்கு நடனம், சங்கீதம், நாடகமும் அரங்கியலும், வணிக மும் கணக்கியலும, விஞ்ஞானம் (ஆங்கில மொழி மூலம்) ஆகிய பாடநெறிகளுக்கு புதிய மாண வர்களைத் தேர்ந்தெடுப்பதற் கான நேர்முகப் பரீட்சை எதிர் வரும் 16, 16, 17, 18 ஆம் திகதி களில் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியிலும் வெளிமாவட்ட மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 23ஆம் திகதி வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலும் நடைபெறவுள் ளது.

இதில் நடனத்துறைக்கு 54 மாணவர்களும், சங்கீதத்துறைக்கு 45 மாணவர்களும், நாடகமும் அரங்கியலும் துறைக்கு 42 மாணவர்களும், வணிகமும் கணக்கியல் துறைக்கு 172 மாண வர்களும், விஞ்ஞானம் (ஆங்கில மொழி மூலம்) துறைக்கு 51 மாணவர்களும் தெரிவு செய்யப் பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக் கப்பட்டுள்ள மாணவர்களைத் தவறாது சமூகமளிக்குமாறு யாழ். தேசியக் கல்வியியற் கல் லூரி பீடாதிபதி எஸ்.கே.யோக நாதன் அறிவித்துள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக் கப்பட்டோர் விபரம் வருமாறு :

விஞ்ஞானம்
(ஆங்கில மொழி மூலம்)

ரி, ஸ்ரீரஜீவன் - (ஜெயந்திநகர்), பி.தங்கராசா - (புலோலி மேற்கு), எஸ்.சொக்கலிங்கம் - (கரவெட்டி), என்.அரவிந்தன் - (புலோலி தெற்கு), எஸ்.சுகிர்தா - (சுன் னாகம்), எல்.செல்வராஜா - (அல் வாய் வடக்கு), ஏ.வேலாயுதம் - (கொக்குவில்), எம்.ரஜீகரன் - (சுன்னாகம்), பி.கபில் - (கோண் டாவில்), எஸ்.துவாரகா - (கொக் குவில்), எஸ்.அசிதா - (மீசாலை), ரி.செல்வராஜ் - (வட்டுக்கோட் டை), வை.தங்கமயில் - (தாளை யடி), எம்.ஜி.கோமகள் - (அல் வாய்), கே.சோபிகா - (மானிப் பாய்), எஸ்.ஜீவாகினி - (நீர் வேலி), ஜெ. அகிம்ஷா - (கர வெட்டி), ரி.சொர்ணலிங்கம் - (மானிப்பாய்), எஸ்.வீனுஜா - (மீசாலை), ரி.நிருஜா - (கல்வி யங்காடு), என்.நடராஜன் - (யாழ்ப்பாணம்), ரி.கோமதி - (புலோலி மத்தி), எஸ்.அருந்த வராசா - (சுன்னாகம்), எஸ். ஜனன் - (உயரப்புலம்), எம். குணசிங்கம் - (கொடிகாமம்), ஏ.யோகேந்திரன் - (சண்டிலிப் பாய்), பி.சாளினி - (யாழ்ப்பா ணம்), எஸ்.தனுஜா - (கொக்கு வில்), ரி.சஜீதா - ஆனைக் கோட்டை), எஸ்.தர்சிகா (கோண் டாவில் வடக்கு), எஸ்.செந்தூரன் - (அத்தியடி), பி.நிரோசன் - (இணுவில் தெற்கு), ரி.தியாக ராஜா - (சங்கானை), கே.பிரபா லினி - (யாழ்ப்பாணம்), ரி.வைத் தியநாதன் - (கோண்டாவில் வடக்கு), கே.விவேகானந்தா - (கோப்பாய் தெற்கு), ஆர்.பரணி ரூபசிங்கம் - (கலட்டி), பி.பத்ம நாதன் - (உடுவில்), ரி.தர்மிகா - (ஆவரங்கால் மேற்கு), ஜெ.திருமராசா - (சுன்னாகம் மேற்கு), கே.கேதீஸ்வரன் - (கரவெட்டி), ஆர்.நிஷாலினி - (மன்னார்), எம்.ஏ. அபூகா - (புத்தளம்), ரி.சித்திரவேல் - (வவுனியா), ஏ.சுந்தரராஜன் - (வவுனியா), ஐ.தம்பாபிள்ளை - (வவுனியா), பி.யோகராஜ் - (பண்டாரிக்குளம் வவுனியா), எம்.எம்.பாத்மாரிஷ்னி - (வவு னியா), பி.பரமேஸ்வரன் - (வவு னியா), ஏ.மாதவன் - (வவுனியா), என்.நிரஜா - (வவுனியா).

(மிகுதி நாளை தொடரும்...)

# பிரஜாவுரிமை இன்று வழங்கல்

இந்தியாவில் பிறந்த 100 குழந் தைகளுக்கு இலங்கை பிரஜா வுரிமை வழங்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு வவுனியா மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற வுள்ளது.

யுத்தம் காரணமாக இந்தியா விற்கு சென்றவர்களுக்கு அங்கு குழந்தைகள் பிறந்த நிலையில் மீண்டும் இலங்கை திரும்பியிருந் தும் இலங்கை பிரஜாவுரிமை கிடைக்காது பல்வேறு இடர்பாடு களை சந்தித்து வந்திருந்தனர்.

இவர்களுக்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் ஊடாக பிரஜாவுரிமை பெறுவதற்கான நட மாடும் சேவையினை ஏற்பாடு செய்திருந்தது. அதனூடாக பலர் நன்மை பெற்றிருந்த நிலையில் அவ்வாறு விண்ணப்பம் செய்த 100 பேருக்கான பிரஜாவுரிமை சான்றி தழ்கள் இன்று வழங்கப்படவுள்ளன.

# ஹஜ்ஜுப் பெருநாள் ஈதுல் அல்ஹா பற்றிய அறிவித்தல்

எதிர்வரும் 7ஆம் திகதி ஈதுல் அல்ஹா ஹஜ்ஜுப் பெருநாளாகும். இத்தினத்தில் யாழ்ப்பாணம் முஹம்மதியாமஸ்ஜித் (புதுப்பள்ளி) யில் பெண்களுக்கான ஹஜ்ஜு பெருநாள் தொழுகை காலை 7.00 மணிக்கு நடைபெறும்.

ஆண்களுக்கான ஜும்மா பிரசங்கமும், தொழுகையும் பெரிய பள்ளிவாசலில் காலை 8.00 மணிக்கு இடம்பெறும்.

கடந்த நோன்புப் பெருநாள் ஒஸ்மானியாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன. தற்போது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையினால் ஹஜ்ஜுப் பெருநாள் பள்ளி வாசலில் இடம்பெறும்.

திங்கள் மாலை சகல பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களும், உலமாக்களும் புதிய மொஹதின் பள்ளியில் ஒன்று கூடி ஆலோ சனை நடத்தியதன் பிரகாரம் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டன. (105)


## வேண்டுகோள்

யாழ். நல்லூர் கந்தசுவாமி கோவிலில் நேற்று இடம்பெற்ற சூரன்போர் நிகழ்வில், பழமுதிர்ச்சோலை ஐஸ்கிறீம் கடைக்கு அருகில் உள்ள வீட்டில் விடப்பட்ட பெண்களுக்கான சைக்கிள் (லுமாலா) காணாமல் போயுள்ளது. தற்செயலாக மாறி எடுத்துச் சென்றவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட முகவரியில் ஒப்படைக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கின் றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

114/1, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/595



## யாழ்ப்பாணம் மாநகரசபை

## கேள்வி அறிவித்தல் - 2012

2011.10.29 ஆம் திகதியில் பிரசுரிக்கப்பட்ட எமது விளம்பரத்தில் குறிப்பு : 11 மேலதிகமாக சேர்க்கப்படுகின்றது.

11. சபையினால் குத்தகைக்கு வழங்கப்படும் இறைச்சிக் கடைகளில் குருநகர் மாட்டிறைச்சிக் கடைகளுக்கு மீளளிக்கக் கூடிய கேள்வி பிணைப்பணம் ரூபா 7000.00 உம். ஏனைய இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், கோழிக்கடைகள் என்பனவற்றிற்கு மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணமாக ரூபா 5000.00 உம் அறவிடப்படும்.

திருமதி யோ.பற்குணராஜா,
மாநகர முதல்வர்,
மாநகரசபை.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2011.11.01

(C/1048)

உடல், வாய், மனம், பணம் என்ற நான்கு வகைகளிலும் பாவம் செய்கிறோம். இதற்குப் பிராயச்சித்தமாக உடலால் உதவியும் வாயால் பகவான் நாமமும், மனதால் தீயானமும், பணத்தால் தர்மமும் செய்யவேண்டும். –காஞ்சிப் பெரியவர்–

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## அன்பு செய்து பெருகுவோம்!

உலக மக்கள் தொகை கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவுடன் 700 கோடியை (7 பில்லியன்) எட்டியதாக ஐக்கிய நாடுகள் சபையின் உலக சனத்தொகை நிதியம் அறிவித்துள்ளது. ஒவ்வொரு நாட்டிலும் ஞாயிறு நள்ளிரவுக்குப் பின் பிறந்த குழந்தையை 700 ஆவது கோடியாகப் பிறந்த குழந்தை எனக் கொண்டாடினார்கள்.

சனத்தொகை அதிகரிப்பு என்பது கொண்டாடுவதற்குரிய விஷயமல்ல என்பதுதான் சிக்கல். மருத்துவ முன்னேற்றங்களால் இறப்பு விகிதம் குறைந்து பிறப்பு விகிதம் அதிகரித்தபடியே இந்த வேகத்தில் சென்றால் பூமியில் உணவும் உறைவிடமும் போதாமல் மனிதர் பாடு திண்டாட்டமாகிவிடலாம் என்பதே நம்மைப் பயமுறுத்துகிற விஷயம்.

"நாம் இருவர் நமக்கு இருவர்" என்றும் "வீட்டுக்கு ஒரு மரம், வீட்டுக்கு ஒரு குழந்தை" என்றெல்லாம் சொல்லிப் பார்த்தும் உலகத்தின் சனத்தொகைப் பெருக்கத்தை கட்டுப்படுத்த முடியவில்லை என்பதே உண்மை. 1999 இல் 600 கோடியைத் தாண்டிய உலக மக்கள் தொகை கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவுடன் 700 கோடியை எட்டியது.

அதாவது 12 ஆண்டுகளில் 100 கோடி சனத்தொகை அதிகரித்திருக்கிறது. ஆனால் மனித இனம் தோன்றி அதன் தொகை 100 கோடிக்கு வந்தது, கிறிஸ்துவின் பிறப்பிற்குப் பின் 1804 ஆண்டுகள் கழிந்த பிறகுதான். 1927 இல் 200 கோடியாகி 1960 இல் 300 கோடியாகியது. அதன்பின் 39 ஆண்டுகளில் இரண்டு மடங்காக 600 கோடி ஆனது.

இப்போது 700 கோடியைத் தாண்டியிருக்கும் உலக மக்கள் தொகை 2050 ஆம் ஆண்டில் 900 கோடியாகப் பதிவாகும் எனக் கணிக்கப்படுகிறது. ஆனால், இந்தக் கணக்கெடுப்புக்கள் அவ்வளவு துல்லியமாக இருக்க முடியுமா என்ற கேள்வியும் உண்டு. "அமெரிக்காவிலேயே மக்கள் கணிப்பிற்கு உட்படாத சட்டமுரணான குடியேற்றவாசிகள் நிறையப் பேர் உள்ளார்கள். இவர்களுக்கு உருப்படியான பதிவுகள் கிடையாது. இதுபோல பல நாடுகளிலும் பதிவின்றிப் பல்லாயிரம் மக்கள் இருக்கிறார்கள். ஆகவே உலக சனத்தொகை துல்லியமாகக் கணக்கெடுக்கப்ட்டு, இதுதான் ஏழாவது பில்லியனாகப் பிறக்கும் குழந்தை என்று கூறுவது சுத்த அபத்தம்" என்கிறார்கள் அமெரிக்க பல்கலைக்கழக குடித்தொகை கணிப்பாளர்கள்.

எப்படியிருந்தபோதும், உலக மக்கள் தொகையில் அமெரிக்காவின் பங்கு 5 வீதம்தான். 20 வீதம் சீனாவுக்கும், 18 வீதம் இந்தியாவுக்கும் உரியது. 2 கோடி சனத்தொகை கொண்ட இலங்கையில் வருடம் ஒன்றுக்கு 3 இலட்சத்து 80 ஆயிரம் குழந்தைகள் பிறக்கின்றன.

மக்கள் தொகைப் பெருக்கத்தை சீனா திறமையாகக் கட்டுப்படுத்தி விட்டதாகச் சொல்லப்படுகிறது. இல்லையெனில் 5 ஆண்டுகளுக்கு முன்பே உலக மக்கள் தொகை 7 பில்லியனைத் தொட்டிருக்கும் என்கிறார்கள்.

ஆனால் சனத்தொகையை அவ்வளவு தீவிரமாகக் கட்டுப்படுத்துவது நல்லதல்ல என்கின்றனர் ஆய்வாளர்கள். சீனாவில் இன்று சிறார்களை விட முதியோரும் நடுத்தர வயதினரும்தான் மிக அதிகம். இது மனிதவள ஆற்றலைக் குறைத்து விடலாம் என்பதே இதிலுள்ள தீமை.

உண்மையாகப் பார்த்தால், மக்கள் தொகைப் பெருக்கத்தால் உணவு, உறைவிடம், குடிநீர், நல்ல காற்று போன்றவற்றில் பற்றாக்குறை ஏற்பட்டு விடலாம் என்ற அச்சத்தில் நியாயமில்லை. இருக்கும் நிலத்தையும், நீரையும், காற்றையும் நாம் பாழ்படுத்தாமலிருந்தால் போதும். இன்னும் பல கோடி மக்கள் தொகையை இந்த பூமி தாங்கும்.

'உணவு இயற்கை கொடுக்கும். உங்களுக்குத் தொழில் இங்கே அன்பு செய்தல் கண்டீர்' என்கிறான் பாரதி. அன்பும், கல்வியும், அறங்களும் பெருகுமானால் மக்கள் தொகைப் பெருக்கம் மாந்தர்க்கு ஒரு பிரச்சினையே அல்ல.

பிரபஞ்சம் இன்னுமின்னும் பல பூமிகளுடன் விரிந்து கிடக்கிறது. நம் மனங்களையும் விசாலப்படுத்திக் கொண்டால் காற்றிலும் வாழ்விலும் நஞ்சு கலக்காது. உயிர்களின் வரவும் நமக்கு உண்மையில் கொண்டாட்டமாகவே இருக்கும்.

- ஆசிரியர்

# இலங்கையின் மரபுரிமைப் பிரதேசங்கள் அரசிடம் அறிக்கை கோருகிறது யுனஸ்கோ

(கொழும்பு)

இலங்கையில் உள்ள மரபுரிமைப் பிரதேசங்களின் விபரங்களைச் சமர்ப்பிக்கும்படி இலங்கை அரசிடம் "யுனஸ்கோ" அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்கமைய இலங்கைக்கே உரித்தான உலக மரபுரிமைகளின் தற்போதைய எல்லைகள் தொடர்பான அறிக்கையொன்றை யுனஸ்கோ அமைப்பிடம் கையளிபபதற்கு தேசிய மரபுரிமைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

முன்னர் இருந்தவாறே இலங்கைக்கே உரித்தான உலக மரபுரிமைகள் காணப்படுகின்றதா என்பதை உறுதி செய்வதற்கு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் காந்தி விஜேதுங்க குறிப்பிட்டார்.

உலக மரபுரிமைகள் அமைந்துள்ள பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய கட்டடங்கள் மற்றும் அதன் பரப்பளவுகள் தொடர்பில் யுனஸ்கோ அமைப்பு குறித்த நாடுகளிடம் வருடாந்தம் ஆராய்வதாக அவர் கூறினார்.

உலக மரபுரிமைகளின் எல்லைகள் மாற்றமடைந்திருந்தால், குறித்த பகுதிகள் யுனஸ்கோ அமைப்பின் உலக மரபுரிமைகள் பட்டியலில் இருந்து அகற்றப்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையிலுள்ள எட்டுப் பகுதிகள் உலக மரபுரிமைகளாகப் பெயரிடப்படவுள்ளன.

அவற்றுள் நாட்டின் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் ஆறு இடங்கள் அடங்குவதாக தேசிய மரபுரிமைகள் அமைச்சின் செயலாளர் கூறினார். சீகிரியா, தம்புள்ளை விஹாரை, காலி கோட்டை, அனுராதபுரம், பொலன்னறுவை மற்றும் கண்டி ஆகிய இடங்கள் கலாசாரப் பகுதிகளாக பெயரிடப்பட்டுள்ளன.

ஹட்டன் சமவெளி மற்றும் சிங்கராஜ வனம் ஆகியன நாட்டிலுள்ள இயற்கையான உலக மரபுரிமைகள் எனத் தேசிய மரபுரிமைகள் அமைச்சின் செயலாளர் காந்தி விஜேதுங்க மேலும் தெரிவித்தார்.

# சனல் - 4 காணொளிக்கு எதிராக அமெரிக்காவில் இன்று காணொளி

(கொழும்பு)

பிரித்தானியாவை தலமாகக் கொண்டு இயங்கும் சனல் -4 தொலைக்காட்சி, இலங்கையின் இறுதிக் கட்ட யுத்த மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் குறித்து ஒளிபரப்பிய இலங்கையின் கொலைக்களங்கள் ஆவணப் படத்திற்கு பதிலளிக்கும் வகையில் இலங்கை பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள காணொளி அமெரிக்காவில் திரையிடப்படவுள்ளது.

இன்று 2 ஆம் திகதி அமெரிக்காவின் வொஷிங்டனில் குறித்த காணொளி காண்பிக்கப்படவுள்ளதாக இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

அமெரிக்க காங்கிரஸ் இலங்கை நட்புறவு ஒன்றியத்தின் இணைத் தலைவர்களான Chris Van Hollen (D. MD) மற்றும் Robert Aderholt (R. AL) ஆகியோரினால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காணொளி திரையிடப்பட்டதன் பின்னர் யுத்தத்திற்குப் பிந்திய இலங்கையின் மீள் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு குறித்து விசேட கலந்துரையாடல் ஒன்று நடத்தப்படவுள்ளது. வோஷிங்டன் நேரப்படி இன்று மாலை 3 மணி தொடக்கம் 5 மணிவரை இந்நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

# ஐந்து பாடப் பிரிவுகளில் உயர்கல்விக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் ஐந்து பாடப் பிரிவுகளின் கீழ் வெளியிடப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணிதம், விஞ்ஞானம், கலை, வர்த்தகம் ஆகிய நான்கு பாடப் பிரிவுகளின் அடிப்படையில் இதுவரையில் உயர்தர மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி வழங்கப்பட்டது.

எனினும், புதிய பாட விதானத்தின் அடிப்படையில் மற்றுமொரு புதிய பாடப்பிரிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி பொதுப் பாடப் பிரிவு என்னும் மற்றுமொரு பாடப் பிரிவு மொத்தமாக ஐந்து பாடப் பிரிவுகளின் அடிப்படையில் இம்முறை உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட உள்ளன.

2008 ஆம் ஆண்டு கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட புதிய பாட விதானம் தொடர்பான சுற்று நிருபத்தின் அடிப்படையில் இந்த பெறுபேறுகள் வெளியிடப்பட உள்ளன.

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற பரீட்சையில் புதிய பாட விதானத்தின் கீழ் ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

இதன்படி இம்முறை உயர்தரப் பரீட்சையின் Z ஸ்கோர் வெட்டுப் புள்ளி ஐந்து பாடப் பிரிவுகளின் கீழ் வெளியிடப்பட உள்ளது.

## சட்ட நடவடிக்கையில் தேர்தல் திணைக்களம்

தமது சொத்துக்கள் தொடர்பான தகவல்களை வழங்காத எட்டு உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு தேர்தல் திணைக்களம் தயாராகி வருகிறது.

குறித்த உறுப்பினர்கள் தொடர்பில் அவர்களது விடயங்களை தெளிவுபடுத்தவுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அத்துடன் சொத்துக்கள் தொடர்பான தகவல்களை வழங்காத குறித்த உறுப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களின் சொத்துக்கள் தொடர்பான தகவல்களை சமர்ப்பிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் நேற்று முன்தினத்துடன் நிறைவடைந்தது.

# க.பொ.த உயர்தர மாணவருக்கு புதிய புலமைப் பரிசில் திட்டம்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தர மாணவர்களுக்கான விசேட புலமைப் பரிசில் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த முன்னணி மாணவர்களுக்கு இந்தப் புலமைப் பரிசில் வழங்கப்பட்டுள்ளது.

இப் புலமைப் பரிசிலானது இலங்கையில் உள்ள ஒவ்வொரு கல்வி வலயத்திலிருந்தும் 100 மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு மாணவருக்கும் க.பொ.த உயர்தர வகுப்பில் பயிலும் காலத்தில் மாதம் 500 ரூபா வீதம் 2 ஆண்டுக்கு உதவு தொகையாக வழங்கப்படும்.

இப் புலமைப்பரிசிலிற்கு விண்ணப்பிக்கும் மாணவர் ஒவ்வொருவரும் அரசாங்கப் பாடசாலை ஒன்றிலோ அல்லது கட்டணம் அறவிடப்படாத தனியார் பாடசாலை ஒன்றிலோ கல்வி கற்பவராக இருப்பதுடன் இவர் சார்ந்த குடும்ப வருமானம் மாதம ஒன்றிற்கு ஐயாயிரம் ரூபாவிற்கு மேற்படாமலும் இவர் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் உதவு தொகை பெறாதவராகவும் இருத்தல் வேண்டும்.

இப்புலமைப் பரிசில் தொடர்பான முழுமையான விபரங்களையும் விண்ணப்படிவத்தையும் இணையத்தளத்திலிருந்தும் வலயக் கல்வி அலுவலகங்களிலிருந்தும் பெற்றுக் கொள்ள முடியும்.

# புனரமைக்கப்பட்டு ஒரு வாரத்தில் முற்றாகச் சேதமடைந்துள்ள வீதி

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு உடுத்துறை பாடசாலை வீதி அண்மையில் புனரமைக்கப்பட்ட நிலையில் மீளவும் அவ்வீதி சேதமடைந்துள்ளதாக அப்பிரதேச பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எண்றிப் திட்டத்தின் கீழ் கடந்த 24ஆம் திகதி இவ்வீதி கற்கள் பரவி தார் ஊற்றி செப்பனிடப்பட்டது.

இதன் பின்னர் தற்போது பருவ மழை ஆரம்பித்துள்ள நிலையில் வாகனங்களின் போக்குவரத்தினால் இவ்வீதி கற்கள் கிளம்பிய நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

முன்னர் இவ்வீதியூடான போக்குவரத்து சீராக இடம்பெற்று வந்த நிலையில் தற்போது இவ்வீதி சேதமடைந்துள்ளதால் மழை நீர் தேங்கி நிற்பதுடன் பாதசாரிகள் மற்றும் துவிச்சக்கரவண்டிகள், வாகனங்களில் செல்வோர் தாம் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாவதாகத் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதியூடாக நாளாந்தம் அதிகளவான மக்கள் பிரயாணம் செய்துவரும் நிலையில் இவ்வாறு வீதிகள் ஒழுங்கு முறையில் சீராக செப்பனிடப் படாமையால் தாம் சிரமங்களுக்குள்ளாவதுடன் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுத்து செயற்படவேண்டும் என அப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (உ-38)

# வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு மாணவர்களுக்கான போட்டிகள்

வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே பின்வரும் போட்டிகளை பாடசாலை மட்டத்தில் நடத்தி முதலாவதாக தெரிவு செய்யப்பட்ட மாணவரது ஆக்கங்களை பெயர் விபரத்துடன் வகுப்பு ரீதியாக யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி அபிவிருத்திப் பிரிவிற்கு அனுப்பிவைக்குமாறு பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சுயதேடலூடாக மானுடத்தின் மேம்பாடு எனும் தலைப்பில் நடைபெறும் இப்போட்டியில் தரம் மூன்று முதல் ஐந்து வரையான மாணவர்களுக்கு வாசிப்பு, சிறுகதை எழுத்தாக்கப் போட்டிகளும், தரம் ஆறு முதல் எட்டு வரையான மாணவர்களுக்கு பொது அறிவு மற்றும் சுவரொட்டிப் போட்டிகளும் நடைபெறவுள்ளது.

மேலும் தரம் ஒன்பது முதல் 11 வரையான மாணவர்களுக்கு சிறுகதை, ஓவியப் போட்டிகளும் தரம் 12, 13 மாணவர்களுக்கு கவிதை, ஓவியப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளது. (03)

# சாரதி அனுமதிப்பத்திரம் தொடர்பான அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பத்தை 31-12-2010 திகதிக்கு முன் சமர்பித்து இதுவரை தமக்கான எழுத்துப் பரீட்சையையும் செயன்முறைப் பரீட்சையையும் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 31-12-2011ஆம் திகதிக்கு முன்னதாக பூர்த்தி செய்ய வேண்டும். அவ்வாறு பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப் படிவங்கள் யாவும் இரத்தாகும் என யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள மோட்டார் வாகன பரிசோதகர் அறிவித்துள்ளார்.

# வலிகாமம் துருத்திப்பிட்டியில் பனை நடுகைத் திட்டம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்குப் பகுதியில் உள்ள துருத்திப்பிட்டி என்ற பகுதியில் விசேட பனை நடுகைத் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

பொன்னாலை கிராம அலுவலர் பிரிவுக்குள் உள்ள மேற்படிப் பகுதி இதுவரை காலமும் பயன்பாடு எதுவுமின்றி தரிசு நிலமாகக் காணப்பட்டது. தற்போது இப்பகுதியில் விசேட பனை விதை நடும் திட்டம் ஒன்றை வலி மேற்கு பிரதேச செயலகம் நடைமுறைப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின்படி சுமார் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட பனை விதைகள் தற்போது அப்பகுதியில் நாட்டப்பட்டிருக்கின்றது. இதற்கான நடவடிக்கைகளை வலி மேற்குப் பிரதேச செயலகத்துடன் இணைந்து மேற்படி கிராமத்தின் கிராமிய அமைப்புக்களும் மேற்கொண்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# தீவக மாணவர் கல்வி வளர்ச்சிக்கு தேவையான உதவி வழங்கப்படும்

## யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார்



(யாழ்ப்பாணம்)

தீவகத்தில் மாணவர்களுடைய கல்வி வளர்ச்சி முன்னேற்றம் அடைந்துவரும் நிலையில் அந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு நான் உதவிகளைச் செய்வேன் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற வேலணைப் பிரதேச செயலகத்தின் சர்வதேச சிறுவர், முதியோர் தின நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், சிறுவர்கள் எதிர்காலத் தலைவர்கள், முதியோர்கள் அவர்களை வழி நடத்துபவர்கள். அவர்களை நல்ல நிலைக்குக் கொண்டு வருவது எமது எல்லோருடைய கடமையாகும்.

வடமாகாண அபிவிருத்திக்காக அரசாங்கத்தினால் பெருந்தொகையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு யாழ். மாவட்டத்தில் அனைத்துப் பிரதேசங்களிலும் நடைபெறுகின்றது. இதேவேளை எமது பிரதேசத்தின் அபிவிருத்தியை முழு வீச்சில் செய்து முடிப்பதற்கு என்னால் ஆன அனைத்து முயற்சிகளையும் எடுப்பேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வேலணைப் பிரதேச செயலக மாநட்டு மண்டபத்தில் மு. நந்தகோபாலன் பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராக வேலணைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு. சரவணபவானந்தன், யாழ். மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் ஏ. ஞானவேல், யாழ். மாவட்ட நன்னடத்தை உத்தியோகத்தர் சி. சிவகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் தீவகப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசிலில் சித்திபெற்ற ஏழு மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டதுடன் முதியோர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (85)

# நெற்செய்கை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

தொடர்ச்சியாகப் பெய்து வரும் கனமழையினால் மண்டைதீவு பகுதிகளில் காலபோகச் செய்கை முற்றாக நாசமடைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் கடந்த வருடத்தைவிட இவ்வருடம் 100 ஏக்கருக்கு அதிகமான நெற்செய்கை மேற்கொள்வதற்காக விவசாயிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இதனால், விவசாயிகள் தமது நிலங்களை பண்படுத்தி விவசாயச் செய்கையில் ஈடுபட்டு வந்தனர்.

தற்போது பெய்துள்ள மழையால் வயல்களில் விதைத்த நெல் முளைத்து வரும் நிலையில் முற்றாக அழிந்துள்ளதாகவும், இதனால் தமக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.


இதேவேளை, இப்பிரதேசத்தில் போதியளவில் வடிகால்கள் சீர் செய்யப்படாத நிலையில் வயல்களை மேவி நிற்கும் வெள்ளத்தை வெளியேற்ற முடியாத நிலை காணப்படுவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (


# பதிவுகளை மேற்கொள்ளவும்

(வடமராட்சி)

கரவெட்டி பிரதேசசெயலக விதாத வளநிலையத்தில் பல்வேறு பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இப்பயிற்சிகளைப் பெறவிரும்புபவர்கள் பிரதேச செயலகத்தில் உள்ள விதாத வள நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கணினிப் பயிற்சிநெறிகள், தேனிவளர்ப்பு, பிளாஸ்ரிக்கிலான அழகு சாதனப்பொருட்கள் தயாரித்தல் யோகட் தயாரித்தல் போன்றவற்றின் பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





யாழ். பிரதேச செயலகத்தின் சமுர்த்தி உதவித் திட்டத்தின் கீழ் நேற்று முன்தினம் இடம்பெற்ற வருமானம் குறைந்த தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான உதவி வழங்கும் நிகழ்வில் யாழ். மாநகர சபையின் உதவி மேயர் இளங்கோ (றீகன்) மற்றும் யாழ். பொலிஸ் அதிகாரி, யாழ். பிரதேச செயலர், சமுர்த்தி உதவி ஆணையாளர் ஆகியோர் இணைந்து பயனாளி ஒருவருக்கு தையல் இயந்திரம் வழங்குவதையும், நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் மற்றொரு பயனாளிக்கு மீன்பிடி வலைகள் வழங்குவதையும் காணலாம். (52)

# இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சை தமிழ் மொழி மூலம் 11 பேர் சித்தி

(அரியாலை)

இலங்கை நிர்வாக சேவை போட்டிப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 516 பேர் சித்தியடைந்துள்ளதாகவும், இதில் தமிழ் மொழி மூலம் 11 பரீட்சார்த்திகள் சித்தியடைந்துள்ளதாகவும் திணைக்களத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இந்த வருடம் இலங்கை நிர்வாக சேவை வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தோற்றியோரில் மொத்தம் 516 பேர் சித்தியடைந்துள்ளதாக இணையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிங்கள மொழி மூலப் பரீட்சார்த்திகள் 505 பேரும் தமிழ் மொழியில் தோற்றியோரில் 11 பேரும் சித்தியடைந்துள்ளனர்.

இவர்களது பெயர் விபரங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

இவர்களுக்கான நேர்முகத் தேர்வுக்கான அனுமதிக் கடிதங்கள் விரைவில் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பதாக பரீட்சைத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (23)

# ஆத்மாக்களுக்கான நினைவுத் திருப்பலி


(யாழ்ப்பாணம்)

கத்தோலிக்க கிறிஸ்தவர்களால் ஒவ்வொரு வருடமும் நினைவு கூறப்படும் இறந்த ஆத்துமாக்களின் நினைவுத் திருப்பலி இன்று பல்வேறு இடங்களில் உள்ள கத்தோலிக்க சேமக்காலையில் அனுஷ்டிக்கப்படுகிறது.

அதன்படி இன்று யாழ்.நகரத்தில் உள்ள பிரதான சேமக்காலையான பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் யாழ்.ஆயர் அதி.வண.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் பிற்பகல் 4.30 மணிக்கு மரித்த விசுவாசிகளின் ஆன்ம இளைப்பாற்றிக்கா இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. (21)

# திருப்திகரமற்ற புனரமைப்பால் மீண்டும் சேதமடைந்துள்ள வீதிகள்

## சிறிதரன் எம்.பி. குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்ட பல வீதிகள் திருப்திகரமானதாக மேற்கொள்ளப்பட்டிருக்காமையின் காரணமாக மிகவும் பழுதடைந்து காணப்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் குற்றம்சாட்டியுள்ளார்.

யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற யாழ்., கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலேயே மேற்படி குற்றச்சாட்டை முன்வைத்தார்.

கிரவல் இடப்பட்டு திரவத் தன்மையான தார் ஊற்றி செப்பனிடப்பட்ட பல வீதிகள் தற்போது மீளவும் குண்டும் குழியுமாக மாறி சேதமடைந்துள்ளன.

இதற்கு செலவழித்த பணத்தைக் கொண்டு கல்லிட்டு ஒரு வீதியையேனும் வீதி அபிவிருத்தி அதிகார சபை திருத்தியிருப்பின் அது இன்றும் நிலைத்திருக்கும். அதைவிடுத்து தரமற்ற வீதி செப்பனிடும் வேலைகள் கிளிநொச்சியில் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தமக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் நிதியைக் கொண்டே தாம் இவ்வாறு பணிகளை முன்னெடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

இவ்விடயத்தை கருத்திலெடுத்த ஆளுநர் வீதிக்கு கல்லிட்டு மீளப் புனரமைக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையினருக்குப் பணித்தார். (பா)

### காளான் வித்தி விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதி விவசாயப் பணிப்பாளர் விரிவாக்க அலுவலகத்தின் காளான் வித்தி உற்பத்தி பகுதியினால் காளான் வித்திகள் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தின் விற்பனை நிலையத்தில் 200 கிராம் காளான் வித்தி பைக்கற் ஒன்று 90 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.



கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பழனியாண்டி தட்சணாமூர்த்தி என்பவருக்கு அவரின் வாழ்வாதார முன்னேற்றத்துக்காக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி 25 ஆயிரம் ரூபா காசோலையை உரியவரிடம் வழங்குவதையும் அருகில் வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மதுமதி வசந்தகுமார் மற்றும் பிரதிநிதிகள் அருகில் நிற்பதையும் காணலாம்.

# கால்நடைகளை பராமரிக்குமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்

(வடமராட்சி)

புலோலி கமநல சேவைகள் பிரிவிற்குட்பட்ட விவசாயிகள் தற்போது காலபோக நெற்செய்கையில் ஈடுபடத்தொடங்கியுள்ளமையால் கட்டாக்காலிகளை உடனடியாகக் கட்டுப்படுத்துமாறும் தவறின் காலபோக கூட்டத்திற்கு தீர்மானத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என விவசாயிகளுக்கு தெரியப்படுத்துமாறு விவசாய சம்மேளனங்களை புலோலி கமநல சேவைகள் பிரிவின் பெரும்போக அலுவலர் கு.கோகுலன் கேட்டுக்கொண்டுள்ளார். புலோலி கமநல சேவைப்பிரிவில் அடங்கிய அநேக விவசாய சம்மேளனங்கள் தமது கூட்டங்களில் 31.03.2012 ஆம் திகதிவரை உரியவர்கள் கால் நடைகளை கட்டிவளர்க்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. எனவும் விசாயிகளுக்கு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (116)

# வடமராட்சிப் பிரதேச செயலகங்களின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்கள்

(பருத்தித்துறை)

வடமராட்சி வடக்கு மற்றும் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகங்களில் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்கள் எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக் கிழமை அவ்வவ் பிரதேச செயலகமாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.இதில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலக ஒழுங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிற்பகல் 2 மணிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

அதேவேளை வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் அன்றைய தினம் காலை 9 மணிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் தலைமையில் நடைபெறவுள்ளதுடன் இக் கூட்டத்திற்கு பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்ளவுள்ளார்.

இக்கூட்டத்தில் அனைத்து திணைக்களங்களும் 2011 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட திட்ட முன்னேற்ற அறிக்கைகளையும் 2012 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தவுள்ள திட்டமுன்மொழிவுகளையும் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-109)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(02.11.2011 –புதன்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்

கர வருஷம்

ஐப்பசி 16 ஆம் நாள்.

இராகுகாலம் 12.04–1.34, சுபநேரம் 4.34 –6.04வரை

நட்சத்திரம்: உத்தராடம் பி.ப. 4.45 வரை

திதி: ஸப்தமி பி.ப. 3.31 வரை

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

மேடம்:– பணம் வரும், குடும்பத்தில் குதூகலம், அயலார் உதவி, நண்பர் வருகை, தேக சுகம்.

ரிஷபம்:– குடும்பத்தில் கவலை, காசுக் கஷ்டம், மனச்சஞ்சலம், தொழில் மந்தம், தேக சுகம்.

மிதுனம் :–காசுவரும், குடும்பத்தில் குதூகலம், நண்பர் உதவி, சகோதர பாசம், அதிர்ஷ்ட லாபம்.

கடகம்:– குடும்பத்தில் சலனம், காசுக் கஷ்டம், தொழில் முடக்கம், அதிகாரப் போட்டி, தேக சுகம்.

சிம்மம்:– பணம் வரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, தொழில் விருத்தி, தேக சுகம், அதிர்ஷ்டலாபம்.

கன்னி :– குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், கடன் படுதல், சுற்றத்தார் ஆதரவு, தேக சுகம் பாதிப்பு.

துலாம் :–பணம் வரும், குடும்பத்தில் குதூகலம், மன மகிழ்ச்சி, அயலார் தொல்லை, தேக நலக்குறைவு.

விருச்சிகம்:– குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும் தொழில் விருத்தி, கடன்வசூல், தேகம் சுகம்.

தனுசு:– பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை,உடல்நலக்குறைவு, மருத்துவச் செலவு.

மகரம:– குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும், தொழில் முடக்கம், தேகம் சுகம், தெருவிபத்து.

கும்பம் :– பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, அதிகாரப் போட்டி, நினைத்ததைச் சாதித்தல்.

மீனம் :– குடும்பத்தில் குதூகலம் பணம் வரும், தொழில் லாபம், தேகம் சுகம், கடன் வசூல்.

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

உயர்தொழில் நுட்ப நிறுவனப்பட்டமளிப்பு தொடர்பில் பட்டம் பெறவுள்ள மாணவர்களுடனான கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

செ.செல்வநாதன் தலைமையில் உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் நடைபெறவுள்ள இக் கலந்துரையாடலில் பட்டம் பெறவுள்ள சகலமாணவர்களையும் குறித்த நேரத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# பல வருடங்களாக திருத்தப்படாத மீசாலை கல்லாரை வீதி

## - மழையினால் பொதுமக்கள் சிரமம்

(சாவகச்சேரி)


மீசாலை கல்லாரை வீதி பலவருடங்களாக திருத்தப்படாத நிலையில் பலத்த சேதமடைந்துள்ளதால் இவ் வீதியூடான போக்குவரத்து பெரும் சிரமத்தின் மத்தியில் இடம்பெற்று வருவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

மீசாலை கொடிகாமத்துக்கு செல்லும் பிரதான வீதியாக காணப்படும் இவ்வீதி தற்போது குன்றும், குழியுமாகக் சேதமடைந்துள்ளதால் மழை நீர் தேங்கி நின்று போக்குவரத்துக்கு இடையூறை ஏற்படுத்துவதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ் வீதியூடாக தினமும் பாடசாலை மாணவர்கள், வர்த்தகர்கள், உத்தியோகத்தர்கள், பொது மக்கள் எனப் பலர் பயணம் செய்கின்றனர்.

இந்த நிலையில் தற்போது பெய்து வரும் பருவ மழையினால் வாகனப்போக்குவரத்துக்கள் துவிச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள்களில் செல்வோர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் குறிப்பாக விபத்துக்கள் ஏற்படும் அபாயம் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இவ் விடயம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ் வீதிப் புனரமைப்புக் குறித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (உ-11)




'நாடகமே உலகம்: நாமதில் நடிகர்கள்' என்பார்கள். நாடகக் கலை தமிழில் வளரவில்லை என்ற குறைபாடு முன்வைக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாடகமென்றால் நாட்டுக்கூத்தெனப்படும் தென்மோடி, வடமோடி, வசந்தன் கூத்து, காத்தான் கூத்தெண்டெல்லாம் தமிழில் நடிக்கப்பட்டும், பன்னெடுங்காலமாக ஆடப்பட்டும் வருகிறது.

அவை நமது நாட்டில் தோன்றி வளர்க்கப்பட்டு நல்ல வளர்ச்சியைக் கண்டுள்ளன. என்றால் நாடகம் வளர்ச்சி அடையவில்லை என்றாகுமா?

தமிழில் நவீனமாகத் தோன்றிய முற்றிலும், வசன நடையைக் கொண்ட நாடகம் வளரவில்லை என்பதாகும் அது.

நாடகம் தனியொரு மனிதனால் எழுதப்படலாம்: நாடகமாகக் காண்பிக்க முடியுமா?

பலர் சேர்ந்த கூட்டு முயற்சிதான் நாடகம். அதனால்தான் அதுவளர முடியாமல் போனதுக்கான காரணமாகவும் இருக்கலாம்.

உதாரணத்துக்கு என்னால் எழுதப்பட்ட நாடகம் அந்த மன்றத்தால் இரண்டொரு தடவைகள் மேடை ஏற்றப் பட்டிருந்தது.

அதில் ஒரு பிரதியை வானொலிக்கும் அனுப்பி இருந்தேன். அந்தக் காலத்தில் யாழ். மாநகர சபை திறந்த வெளிக்கலை அரங்கில் பௌர்ணமி தினங்களில் விழாக்களை நடத்திக் கொண்ருந்தது.

மேடை, ஒலி, ஒளி வழங்குவார்கள். நாடகம் போடுபவர்கள் ஒப்பனையை பொறுப்பெடுத்துக்கொண்டு நாடகங்களை மேடை ஏற்றுவார்கள். அதற்கு மாநகரசபை 75 ரூபா பணமும் அன்பளிப்பாக வழங்கும்.

அது அந்தக் காலமென்ன இந்தக் காலத்திலும் அப்படியொன்று அமைந்தால் வரப்பிரசாதந்தானே! அதனால் அதனில் இடம் பிடித்துக்கொள்வது இலேசில் அமையாது.

நானொரு மாதிரி அதற்குப் பொறுப்பானவரை அணுகி இடமெடுத்துக் கொண்டேன். அதனால் மன்றத்தில் எனக்கு வரவேற்பிருக்குமென நம்பினேன். கூட்டத்தில் அதனைத் தெரிவித்ததும் கோளாறு தொடங்கியது.

அந்த நாடகம் கதை சரியில்லை: வசனம் சரியில்லை வேறொரு நாடகத்தைக் கொடுத்திருக்கலாந்தானே என்றார் செயலாளர்.

அவர் எழுதிய நாடகம் இருக்க நானெழுதிய நாடகத்தைக் கொடுத்ததுதான் அவருக்குப் பிடிக்கவில்லை என்பது விளங்கியது.

அத்துடன் அவர்களுடன் மல்லுக்கட்டிக்கொண்டிருந்தால் என்னுடைய வளர்ச்சி அமையாதென நினைத்த நான் விலகிக் கொண்டேன்.

இரண்டொரு வாரத்தில் வானொலிக்கு அனுப்பி இருந்த அந்த நாடகம் ஒலிபரப்புக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டதாக பதில் வந்திருந்தது.

கதை வசனம் சரியில்லையென பிரஸ்தாபிக்கப்பட்ட அந்த நாடகம் ஒலிபரப்புக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது எப்படி?

நாடகத்தை ஒலிபரப்பாமல் நிறுத்துவதற்கு மன்றச் செயலாளரால் பெட்டிசன் போடப்பட்டதெல்லாம் பழைய கதைகள்.

இவ்விதம் ஏட்டிக்குப் போட்டி என்றால் தமிழில் எந்தத் துறைதான் வளரும்? நாடகமே உலகம் நாமதில் நடிகர்கள் இல்லையா?


## விபுலானந்தன் ஞாபகார்த்த பாடசாலைகள் மட்ட கூடைப்பந்து

# யாழ். இந்து, கொக்குவில் இந்து சம்பியன்





விருந்தினரிடமிருந்து கிண்ணத்தைப் பெற்றுக்கொள்ளும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணித் தலைவர் மற்றும் அணியினர்





விருந்தினரிடமிருந்து கிண்ணத்தைப் பெற்றுக்கொள்ளும் யாழ். இந்துக் கல்லூரி அணித் தலைவர் மற்றும் அணியினர்

(படங்கள் : பா. சிகான்)

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியின் மாணவ முதல்வர் சபை அமரர் பொன். விபுலானந்தன் ஞாபகார்த்தமாகப் பாடசாலைகளுக்கிடையில் நடத்திய கூடைப் பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் யாழ். இந்துக் கல்லூரியும், பெண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

மின்னொளியில் நடைபெற்ற இப் போட்டி நேற்று முன்தினமிரவு யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்ட மைதானத்தில் இடம்பெற்றது.

பெண்களுக்கான இறுதிப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும், இராமநாதன் பெண்கள் கல்லூரி அணியும் மோதின. இதில் சிறப்பான முறையில் ஆடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 25-11 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தொடர்ந்து நடைபெறவிருந்த பெண்களுக்கான மூன்றாமிடத்திற்கான போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியும் யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையும் மோதவிருந்தது. வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணி சமூகம் கொடுக்காமையால் யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு வெற்றி வழங்கப்பட்டது. இதன் மூலம் மூன்றாமிடத்தை யாழ். இந்து மகளிர் கல்லூரி பெற்றுக் கொண்டது.

ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணியும், யாழ். இந்துக் கல்லூரி அணியும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் 32-30 என்ற புள்ளிகள் அடிப்படையில் இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

ஆண்களுக்கான மூன்றாமிடத்திற்கான போட்டியில் சென் பற்றிக்ஸ் அணியும், கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் மோதின. இதில் 28-20 என்ற புள்ளிகள் அடிப்படையில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

ஆண்களுக்கான இறுதிப்போட்டியில் சிறந்த வீரராக யாழ். இந்துக் கல்லூரி வீரர் எம். கபிலனும், தொடர் நாயகனாக யாழ். மத்திய கல்லூரி வீரர் பி. சசிந்திரனும் தெரிவானார்கள். பெண்களுக்கான இறுதிப் போட்டியில் சிறந்த வீராங்கனையாக கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஆர். சரசுதாவும், தொடரின் சிறந்த வீராங் கனையாக இராமநாதன் பெண்கள் கல் லூரியைச் சேர்ந்த சுபினியாவும் தெரி வானார்கள்.

இப்போட்டி நிகழ்வில் யாழ் மத்திய கல்லூரி அதிபர் கே. எழில்வேந்தன், பிரான்ஸ் பழைய மாணவர் சங்கத் தலைவர் கே. முத்துக்குமார்; ஏ,ஏ.எஸ். நிறுவன முகாமையாளர் விக்னேஸ்வரன் கலந்துகொண்டு வெற்றிக் கிண்ணங்களை வழங்கிக் கௌரவித்தனர். இதே வேளை, கொட்டும் கடும் மழைக்கு மத்தியிலும் மேற்படி போட்டிகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (எப்.எஸ்,93)

# தேசிய இளைஞர் சேவை மன்றால் தேசிய ரீதியான இரவு நேர மரதன்



(கொழும்பு)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் அகில இலங்கை ரீதியில் இரவு நேர மரதன் போட்டியை நடத்த முடிவு செய்துள்ளோம் என்று தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் லலித் பியும் பெரேரா தெரிவித்தார்.

டிசம்பர் மாத நடுப்பகுதியில் இரவு நேர மரதன் போட்டியை நடத்திவுள்ளோம். இதன் மூலம் புதியதொரு சாதனையை எமது இளைஞர்கள் ஏற்படுத்த வேண்டும் என்பது எமது இலக்கு.

இலங்கையில் இடம்பெறவுள்ள முதலாவது இரவு நேர மரதன் ஓட்டப் போட்டியாக இது அமையும். இதனை எமது இளைஞர் பரம்பரையினர் திறம்படச் செய்து காட்டுவார்கள்.

இதேவேளை 23ஆவது தேசிய இளைஞர் விளையாட்டுப் போட்டிக்கு வடக்கு, கிழக்கு பகுதியில் இருந்து பெருமளவான இளைஞர், யுவதிகள் பங்கு பற்றியிருப்பது இன்னுமொரு சிறப்பம்சமாகும். அவர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்த விசேட திட்டமொன்றை நாம் விரைவில் மேற்கொள்ளவுள்ளோம். அதன் மூலம் அவர்களின் விளையாட்டுத் திறன் மேலும் வளர்ச்சியடையும் சூழல் உருவாகும்.

இதேபோன்று இந்த இரவு நேர மரதன் போட்டியிலும் அவர்களை பங்கு பற்றச் செய்வதற்கான ஏற்பாடுகளை நான் மேற்கொண்டுள்ளேன் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை 24ஆவது தேசிய இளைஞர் விளையாட்டுப் போட்டி அநுராதபுரம் நகரத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறந்த வீர, வீராங்கனைகளை இனங்காணும் கிரீடா சக்தி நிகழ்ச்சித்திட்டம் நாளை ஆரம்பம்




விளையாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் நாட்டின் பாடசாலை மட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 14 - 18 வயதுக் கிடைப்பட்ட திறமையான விளையாட்டு வீர, வீராங்கனைகளை இனங்காணும் கிரீடா சக்தி நிகழ்ச்சித்திட்டம் நாளையும், நாளை மறுதினமும் நாடு தழுவிய ரீதியில் இடம்பெறவுள்ளது.

இதில் விளையாட்டு வீர, வீராங்கனைகளின் தனிப்பட்ட திறமைக்கு ஏற்ப அவர்களுக்கு முறையான பயிற்சி நெறிகளுக்கு அமைவாக பயிற்றுவித்து, மாவட்ட மற்றும் மாகாண மட்டத்திலிருந்து தேசிய மட்டத்திற்கு எடுத்துச் சென்று இலங்கைக்கு சர்வதேச வெற்றிகளைப் பெற்றுக் கொள்வதற்கான நோக்கிலேயே இந்த கிரீடா சக்தி வேலைத் திட்டம் விளையாட்டு அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் வட கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்கான தேர்வுப் போட்டிகள் அம்பாறை மாவட்டத்தில் அம்பாறை பொது விளையாட்டு மைதானத்திலும், மன்னார் மாவட்டத்தில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்திலும், வவுனியா மாவட்டத்தில் வவுனியா பொது விளையாட்டு மைதானத்திலும் நாளை 3ஆம் திகதியும் திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலை மக்கெய்ஸர் விளையாட்டு மைதானத்திலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்திலும், யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்ப்பாணம் பொது மைதானத்திலும், கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி பொது மைதானத்திலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு பொது மைதானத்திலும் நாளை மறுதினம் 4ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. மேற்படி தினங்களில் கரப்பந்தாட்டம், ஹொக்கி, உதைபந்து, கூடைபந்து, கபடி மற்றும் வலைப்பந்து போன்ற விளையாட்டுக்களுக்கு வீர, வீராங்கனைகள் தெரிவு செய்யப்படவுள்ளனர். (93)

# இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் மேற்கிந்தியத்தீவு அணியில் பரத்

இந்திய அணிக்கெதிரான டெஸ்ட் தொடருக்கான மேற்கிந்தியத்தீவுகள் அணி சிம்மன்ஸ் நீக்கப்பட்டு அட்ரியன் பரத் துக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் அணியுடனான தொடர் நிறைவடைந்ததும் மேற்கிந்தியத்தீவுகள் அணி இந்தியாவுக்கான சுற்றுலாவை மேற்கொள்கின்றது.

இதில் மூன்று டெஸ்ட் மற்றும் ஐந்து ஒரு நாள் போட்டிகளைக்கொண்ட தொடரில் மேற்கிந்தியத்தீவுகள் அணி மோதவுள்ளது.

முதல் டெஸ்ட் போட்டி வருகிற 6ஆம் திகதி புதுடில்லியிலும், 2ஆவது டெஸ்ட் 14ஆம் திகதி கொல்கத்தாவிலும், 3ஆவது டெஸ்ட் 22ஆம் திகதி மும்பையிலும் ஆரம்பமாகவுள்ளது.

தொடருக்கான மேற்கிந்தியத்தீவுகள் அணி நேற்றைய தினம் அறிவிக்கப்பட்டது. மோசமான ஆட்டம் காரணமாக சிம்மன்ஸ் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

அவருக்குப் பதிலாக அட்ரியன் பரத் இடம் பெற்றுள்ளார். காயம் காரணமாக பங்களாதேஷ் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அவர் ஆடவில்லை.



தற்போது உடல் தகுதி பெற்றதால் பரத் அணிக்கு மீண்டும் அழைக்கப்பட்டுள்ளார்.


இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடும் மேற்கிந்தியத்தீவுகள் அணி வருமாறு:- டரன் சமி (கப்டன்), பரத், சந்தர்போல், சாமுவேல்ஸ், கிரிக் எட்வர்ட்ஸ், டரன் பிராவோ, போவெல், பிடல் எட்வர்ட்ஸ், கால்டன் பவ், பிஷோ, கிரேக் பிராத், ராம்டீன், ரவிராம்போல், ரோச், ஷில்லிங் போர்ட்.

# டெஸ்டில் அதிக கவனம் செலுத்தவிரும்பும் யுவராஜ்

(புதுடில்லி)

டெஸ்ட் போட்டிகளில் இனி அதிக கவனம் செலுத்தப் போவதாக அதிரடி வீரர் யுவராஜ்சிங் தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் சிறந்த வீரர் என்று பெயர் எடுப்பதையே விரும்புகிறேன். டெஸ்ட் போட்டிகளில் அதிக கவனம் செலுத்த இதுதான் சரியான சமயம் என்பதை உணர்ந்துள்ளேன். களத்தில் இறங்கும் ஒவ்வொரு போட்டியிலுமே சிறப்பாக விளையாட வேண்டும் என விரும்புகிறேன்.



காயங்களால் பல தொடர்களில் இருந்து விலக நேர்வது துரதிர்ஷ்டவசமானது. மேற்கிந்தியத்தீவுகள் மற்றும் அவுஸ்ரேலியாவுடன் நடக்க உள்ள டெஸ்ட் தொடர்களில் அதிக ஓட்டங்கள் குவித்து திறமையை நிரூபிப்பேன். டெஸ்டில் எனது சிறப்பான ஆட்டம் இனி மேல்தான் வெளிப்படும். நீண்ட ஓய்வுக்குப் பின்னர், இப்போது முழு உடல்தகுதியுடன் விளையாடத் தயாராக உள்ளேன். இங்கிலாந்தில் இருந்து திரும்பியதும், பயிற்சியில் அதிக கவனம் செலுத்தி கடுமையாக உழைத்தேன். கடந்த ஓராண்டில் காயங்களால் அதிகம் அவதிப்பட்டேன். இந்திய அணிக்காக நீண்ட காலம் விளையாட வேண்டும் என விரும்புகிறேன்.

தற்போது அணியில் இடம்பிடித்துள்ள இளம் வீரர்கள் சிறப்பான முறையில் ஆடி வருகின்றனர். இதே முறையில் இளம் வீரர்கள் ஆடுவது அணிக்கு ஆரோக்கியமானது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# போட்டித் தடை

(பர்ன்பரி)

பாகிஸ்தான் ஹொக்கி அணி வீரர்களுடன் மோதலில் ஈடுபட்ட இந்திய ஹொக்கி அணி வீரர்கள் 3 பேருக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

வீரர்களின் மோதல் விவகாரம் குறித்து போட்டி இயக்குனர் கிரகாம் நேப்பியர் விசாரணை நடத்தினார். விசாரணை முடிவில் வீரர்களுக்குத் தண்டனை அளிக்கப்பட்டுள்ளது.

இதன்படி குர்பஜ்சிங்குக்கு 3 ஆட்டங்களில் விளையாட தடையும், குர்விந்தர்சிங் சண்டிக்கு 5 ஆட்டங்களில் விளையாட தடையும், கப்டன் துஷர் கண்டேகருக்கு ஒரு ஆட்டத்தில் விளையாட தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

அணியின் உதவிப் பயிற்சியாளர் ஜுக்ராஜ்சிங் 5 ஆட்டத்திலும், மானேஜர் டேவிட் ஜான் ஒரு ஆட்டத்திலும் பணியாற்ற தடை விதிக்கப்பட்டு இருக்கிறது.

பாகிஸ்தான் அணியின் கப்டன் ஷகீல் அப்பாசிக்கு ஒரு ஆட்டத்தில் ஆட தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்திய வீரர்கள் மீதான தடையை எதிர்த்து மேன்முறையீடு செய்ய இருப்பதாக ஹொக்கி இந்தியா அமைப்பின் செயலாளர் நரிந்தர் பத்ரா அறிவித்துள்ளார்.

# வெற்றி நடையை தக்கவைத்தால் தானாகவே கிடைக்கும் முதலிடம்



சிறப்பான ஆட்டத்தைத் தொடர்ந்து வெளிப்படுத்தி வெற்றி நடையை தக்கவைத்துக் கொள்ளும் பட்சத்தில், முதலிடம் தானாகவே கிடைத்துவிடும் என செக்குடியரசின் பெட்ரா கிவிட்டோவா தெரிவித்துள்ளார்.

விம்பிள்டன் தொடருக்குப் பின்னர், டபிள்யு.டி.ஏ., சம்பியன்ஷிப் தொடரில் முதல் முறையாக சம்பியன் பட்டம் வென்றது மகிழ்ச்சி அளிக்கிறது. மேற்கூறிய இரண்டு தொடர்களுக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. ஆனால் இரண்டுமே மிகப் பெரிய தொடர்கள். இதில் சாதித்திருப்பதை என்னால் நம்பவே முடியவில்லை.

இதேபோல இந்த ஆண்டுத் தொடக்கத்தில் தரப்படுத்தல் பட்டியலில் 30ஆவது இடத்தில் இருந்த நான், தற்போது இரண்டாவது இடத்துக்கு முன்னேறியிருப்பது உற்சாகம் அளிக்கிறது. முதலிடம் குறித்து சிந்திக்கவில்லை. தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றி நடையை தக்கவைத்துக் கொள்ளும் பட்சத்தில், முதலிடம் தானாகவே கிடைத்துவிடும். இதற்காக சிறப்புக் கவனம் செலுத்த போவதில்லை.

விக்டோரியா அசரன்காவுக்கு எதிரான இறுதிப் போட்டி சவாலாக இருந்தது. ஏற்கனவே இந்த ஆண்டு ஒருமுறை இவருக்கு எதிராக விளையாடியுள்ளேன். எனவே, எங்களது நிறை, குறைகள் பற்றி இருவருக்குமே நன்கு தெரியும். இருப்பினும் அசரன்காவுக்கு எதிராக மீண்டும் ஒருமுறை வெற்றி கண்டிருப்பது மகிழ்ச்சியான விடயம். இந்த மகிழ்ச்சியை நீண்ட காலத்திற்கு தக்கவைத்துக்கொள்வதே எனது தற்போதைய இலக்காகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


# உலகக் கிண்ண கபடி கோலாகல ஆரம்பம்

(பஞ்சாப்)

உலகக்கிண்ணக் கபடிப் போட்டி பஞ்சாபில் நேற்று கோலாகலமாகத் தொடங்குகிறது.

போட்டியை பஞ்சாப் மாநில அரசு நடத்துகிறது. பஞ்சாபின் பத்தின்டா நகரில் போட்டி தொடங்குகிறது. இப்போட்டி நேற்று முதல் நவம்பர் 20ஆம் திகதி வரை மாநிலத்தில் பல்வேறு நகரங்களில் போட்டி நடைபெறும்.

இந்தியா தவிர ஆர்ஜன்ரீனா, பாகிஸ்தான், அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, இத்தாலி, நோர்வே, ஆப்கானிஸ்தான், இலங்கை, அவுஸ்ரேலியா, ஜேர்மனி, ஸ்பெயின் என மொத்தம் 13 அணிகள் இப்போட்டியில் பங்கேற்கின்றன. முதல் இடம் பெறும் அணிக்கு 2 கோடியும், இரண்டாமிடம் வரும் அணிக்கு 1 கோடியும், அடுத்து வரும் அணிக்கு ரூ.51 இலட்சமும் பரிசு வழங்கப்படுகிறது. இது தவிர பங்கேற்கும் பிற அணிகளுக்கு 10 இலட்சம் வழங்கப்படவுள்ளது.



**சச்சின் டெண்டுல்கரின் மனைவி அஞ்சலி மகள் சாரா ஆகியோரை ஜேர்மனின் கார் பந்தய வீரர் மைக்கல் ஷூமேக்கர் சந்தித்த போது...**

# பயிற்றுநர் இராஜினாமா



உலகக் கிண்ணத்தை வென்ற நியூசிலாந்து றக்பி அணியின் பயிற்றுவிப்பாளர் கிரகெம் ஹென்றி தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

கடந்த 08 வருடங்களாக றக்பி அணிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டதுடன், பதவி விலகுவதற்கு தகுந்த தருணம் இதுவெனவும் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்து றக்பி அணியினருக்கு பயிற்சிகளை வழங்கியமை தமக்கு கௌரவமளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2003ஆம் ஆண்டு நியூசிலாந்து அணியின் பயிற்றுனராகப் பொறுப்பேற்றதன் பின்னர் பங்குபற்றிய 103 போட்டிகளில், 88 போட்டிகளில் நியூசிலாந்து வெற்றியீட்டியமை விசேட அம்சமாகும்.



**யாழ். கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட் மின்னல் வேகக் கால்பந்துப் போட்டித் தொடரில் ஆனைக்கோட்டை யூனியன் அணி வீரர் நிரோசன் அதிக கோல்களை அடித்து தொடரின் சிறந்த வீரராகத் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கான விருது வழக்கப்பட்டபோது....**

# தேசிய மட்ட கால்பந்து 3 யாழ். பாடசாலைகள்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு சென் ஜோசப் கல்லூரியினால் தேசிய மட்டத்தில் நடத்தப்படவுள்ள கால்பந்துப் போட்டிக்கு யாழ். மாவட்டத்திலிருந்து மூன்று பாடசாலைகள் பங்குபற்றவுள்ளன.

அணிக்கு ஐந்து பேர் கொண்ட இத்தேசிய மட்டக் கால்பந்துப் போட்டி எதிர்வரும் ஐந்தாம் திகதி கொழும்பில் இடம்பெறவுள்ளது.


ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் அழைக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் இப்போட்டித் தொடரில் மானிப்பாய் இந்து, யாழ்ப்பாணக் கல்லூரி, இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணிகளுக்கும அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அண்மையில் நிறைவடைந்த தேசிய மட்டக் கால்பந்துப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி சம்பியனானமை குறிப்பிடத்தக்கது. (93)

# பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க ஜனாதிபதியின் நெருங்கிய விசுவாசியா?

## விக்கிலீக்ஸ் தரும் தகவல்



(கொழும்பு)

தற்போதைய பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபகஷவின் விசுவாசி என விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பெட்ரிசியா புட்டினாஸ் அந் நாட்டு ராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்த குறிப்புக்களின் அடிப்படையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்தத் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு சரியான முறையில் விசாரணைக்கு உட்படுத்தப் படவில்லை எனத் தெரிவிக்கப்படடுள்ளது.

அரசியல் ரீதியான முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகளில் தற்போதைய பிரதம நீதியரசர் பக்கச்சார்பற்ற நிலையிலும், சுயாதீனமாகவும் செயற்படுவாரா என்பது சந்தேகமே என கொழும்பைச் சேர்ந்த மனித உரிமைச் சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளதாக கொழும்பு டெலிகிராப் என்னும் இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது.

குறிப்பாக ஜனாதிபதியின் குடும்பத்தார் சம்பந்தப்பட்ட வழக்குகள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க காலத்தில் அரசியல் நியமனத்தின் மூலமே ஷிராணி பண்டாரநாயக்க உச்ச நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## கிராம மட்டத்தில் ஆட்சேர்ப்பு ஜே.வி.பி கிளர்ச்சி அணி தீவிரம்

(கொழும்பு)

ஜே.வி.பி.யிலிருந்து விலகிய கிளர்சசி அணியினர், தற்போது கிராம மட்டத்தில் இருந்து தமது அணிக்கு உறுப்பினர்களைச் சேர்க்கும் வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளனர்.

உயர்தரம் மற்றும் சாதாரண தரம் ஆகிய வகுப்புக்களில் கல்வி பயின்று வேலைவாய்ப்பின்றி இருக்கும் இளைஞர், யுவதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், சமுர்த்தி அதிகாரிகள் போன்றோரை உறுப்பினர்களாகச் சேர்ப்பதே இவர்களின் இலக்காக உள்ளது.

புதிய உறுப்பினர்களைச் சேர்க்கும் போது, வடக்கு - கிழக்கு இளைஞர்கள், யுவதிகள் குறித்தும் ஜே.வி.வி.யின் கிளர்ச்சி அணியினர் கவனம் செலுத்தி வருகின்றனர்.

கிளர்ச்சி அணியின் உயர்மட்டத் தலைவர்களின் ஆலோசனையின் பேரில், அதன் இரண்டாம் கட்டத் தலைவர்கள் இணைநது, தமது அணிக்கான புதிய உறுப்பினர்களைச் சேர்த்து வருகின்றனர்.

## போலி நாணயத்தாள்களுடன் இளைஞர் ஒருவர் கைது

(கொழும்பு)

போலி நாணயத் தாள்களுடன் உடப்புப் பகுதி இளைஞர் ஒருவர் மாத்தளை நகரில் வைத்து சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடம் இருந்து மூன்று இலட்சம் ரூபா வரையான கள்ளநோட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் மாத்தளைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரியவருகிறது.

## பதவி பறிபோகும் அபாயம் நிழல்போல் தொடர்கிறது

### பயணங்களை இரத்துச் செய்கிறார் ரணில்

(கொழும்பு)

கட்சியின் தலைமைப்பதவி பறிபோகும் அபாயம் ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பின்னால் நிழல்போல் தொடர்வதாகவும் இதனால் அவர் வெளிநாட்டு பயணங்களை ரத்து செய்து வருவதாக தினமின என்ற சிங்களப் பத்திரிகை பிரதான செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பதில் தலைவர் பதவியை வழங்கி விட்டு செல்வதற்கு விசுவாசமானவர்கள் எவரும் இல்லாத காரணத்தினால் வெளிநாட்டுப் பயணங்களை ரத்துச் செய்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

குறிப்பாக பல முக்கிய வெளிநாட்டுப் பயணங்கள் இவ்வாறு ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



இணைப் பிரதித் தலைவர்களான கரு ஜயசூரிய மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோர் தலைமைப் பதவியை பறிபதற்கு ஆர்வம் காட்டி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

ரணில் வெளிநாட்டுப் பயணமொன்றை மேற்கொள்ளும் போது சதித் திட்டத்தின் மூலம் கட்சித் தலைமைப் பதவியை பெற்றுக் கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சிகுள் உள்ள கிளர்ச்சிக் குழுவினர் திட்டமிட்டு வருவதாக தெரிவிககப்படுகிறது.

## கடந்த கால தேர்தல்கள் மீளாய்வு செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த தேர்தல்கள் தொடர்பிலான ஆய்வொன்றை மேற்கொள்வதற்கு தேர்தல்கள் செயலகம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் இடம்பெற்ற வாக்களிப்பு நடவடிக்கைகள், அதனுடன் தொடர்புடைய சிக்கல்கள் மற்றும் தேர்தலுக்கு பின்னரான காலப்பகுதி தொடர்பில் ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

எதிர்காலத்தில் வாக்களிப்பு நடவடிக்கைகளை செயற்திறனுடனும், நியாயமாகவும் மேற்கொள்வதற்கு உகந்த திட்டங்களை தயாரிப்பது இதன் முக்கிய நோக்கமென தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய குறிப்பிட்டார்.

இந்த நடவடிக்கைக்காக மாகாண மட்டத்தில் பிரதேச தேர்தல் உத்தியோகத்தர்களின் கருத்துக்களும், ஆலோசனைகளும் பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.

இதனை முன்னிட்டு இதன் முதலாவது பிரதேச அமர்வு இம்மாதம் மூன்றாம், நான்காம் திகதிகளில் நுவரெலியாவில் நடைபெறவுள்ளது.

இதன்போது மத்திய மற்றும் ஊவா மாகாணங்களின் தேர்தல் உத்தி யோகத்தர்களின் கருத்துக்களும், ஆலோசனைகளும் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை காலி மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களிலும் இவ்வாறான பிரதேசக் கூட்டங்களை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மேலும் சுட்டிக்காட்டினார்.

## வாதுவயில் கைக்குண்டு வீச்சு ஒருவர் பலி ஆறு பேர் காயம்

(கொழும்பு)

வாதுவ, தெல்துவ பாடசாலைக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்ததுடன், மேலும் ஆறு பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்றிரவு 10.45 அளவில் இரண்டு குழுக்களிடையே ஏற்பட்ட மோதல் வலுப்பெற்றதால் இந்தக் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவத்தில் வாதுவ, தெல்துவ பகுதியைச் சேர்ந்த 28 வயதான இளைஞரொருவரே உயிரிழந்துள்ளார்.

இந்தத் தாக்குதலில் காயமடைந்தவர்கள் பானதுறை, கோனதுவ மற்றும் களுத்துறை நாகொடை வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவரின் சடலம் கோனதுவ வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

## "இலங்கையின் கொலைக்களங்கள்" தயாரிப்பாளருடன் கருத்து மோதல்

(கொழும்பு)

"இலங்கையின் கொலைக் களங்கள்" என்னும் இலங்கை அரசுக்கு எதிரான ஆவணப் படத்தின் தயாரிப்பாளருக்கும் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவினருக்குமிடையில் கருத்து மோதல் இடம்பெற்றுள்ளது.

அவுஸ்ரேலியாவின் பேர்த் நகரில் நடைபெற்ற பொதுநலவாய உச்சிமாநாட்டின்போது, பிரித்தானிய சனல் 4 அலைவரிசையின் இலங்கையின் கொலைக களங்கள் எனும் ஆவணப் படத்தை தயாரித்த கெலம் மெக்ரோ மற்றும் ஜனாதிபதியின் ஊடகப்பிரிவுப் பணிப்பாளர் நாயகமும் ஜனாதிபதியின் பேச்சாளருமான பந்துல ஜயசேகர உட்பட இலங்கை ஊடகவியலாளர் குழுவொன்றுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு எதிராக மெக்ரோ பிரசாரம் செய்து கொண்டிருந்தார். எமது தூதரகத்தினால் விநியோகிக்கப்பட்ட எமது ஆவணப்படங்கள் மற்றும் புத்தகங்களை அவர் வீடியோவில் ஒளிப்பதிவு செய்து கொண்டிருந்தார்.

நானும் ஏனைய இலங்கை ஊடகவியலாளர்களும் அவரை எதிர்கொண்டோம் என பந்துல ஜயசேகர டெய்லிமிரருக்குத் தெரிவித்தார்.

இதன்போது, இலங்கை ஊடகவியலாளர்களை மெக்ரோவின் கமெரா குழுவினர் படம்பிடிக்க ஆரம்பித்தாகவும் இதற்கு பதிலாக மேற்படி நபர்களை இலங்கை ஊடகவியலாளர்கள் குழுவினர் படம்பிடித்ததாகவும் பந்துல ஜயசேகர தெரிவித்தார்.

## பணிப் பகிஷ்கரிப்பை மேற்கொள்ள சுகாதார சேவைச் சங்கம் தீர்மானம்

(கொழும்பு)

பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென வலியுறுத்தி, வைத்தியசாலைகளில் பணிப் பகிஷ்கரிப்பினை மேற்கொள்ள இலங்கை ஜனராஜ சுகாதார சேவைச் சங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி கொழும்பு தேசிய வைத்தியசாலை உட்பட வடககு மற்றும் கிழக்கு வைத்தியசாலைகளில் இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் டபிள்யூ. ஏ.டி.விமலரத்ன தெரிவித்தார்.

அரச சுகாதாரத்துறை சார்நத கனிஷ்ட ஊழியர்களுக்கெதிரான நடவடிக்கைகள் மற்றும் சம்பள உயர்வு உட்பட எட்டு கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்தப் போராட்டத்திற்கு அரசாங்கம் உரிய பதிலளிக்காத பட்சத்தில் நாடு முழுவதும் போராட்டம் முன்னெடுக்கப்படுமென்றும் அவர் குறிப்பிட்டார்.


31. ஒருவன் ஒரு பொருளை 452 ரூபாவுக்கு விற்பதனால் 13 வீதம் இலாபம் அடைந்தான். அவன் அப்பொருளை வாங்கிய விலை யாது?

32. $2^x \times 8^x = 256$ எனின் x ஐக் காண்க.

33. $T = 2\sqrt{\frac{K}{MH}}$ என்பதில் M ஐ எழுவாயாக்குக.


34. $S = a\frac{(r^n - 1)}{(r - 1)}$ a=2, r=3, n=3 ஐ பிரதியிட்டு S ஐக் காண்க.

35.




DE // BC
BD = 4 cm, BC = 10.5 cm , DE = 3.5 cm
எனின் AD இன் நீளம் காண்க.


36.




1) AB இன் படித்திறன் யாது?
2) OP இன் இன் சமன்பாடு யாது?

37. $3x - 2y = 12$
$-2x - 7y = -3$ என்னும் சமன்பாடுகளைத் தீர்க்காது $(x + y)$ இன் பெறுமானம் காண்க.

38.





உருவில் O மையம் x°ஐக் காண்க? காரணம் தருக.

39. காரணி அறிவுகொண்டு பெறுமானம் காண்க. $22/7 \times (7.5)^2 - 22/7 \times (6.5)^2$

40. பெருக்கல் விருத்தியில் முதலாம் உறுப்பு 7. ஆறாம் உறுப்பு 224 எனின் பொது விகிதத்தைக் காண்க.

41.




உருவில் சரிவகம் ABCD ஆகும். DC = 16 cm
AE = 8 cm.
சரிவகம் ABCD யின் பரப்பு 98 cm² எனின் AB ஐக் காண்க.



க.பொ.த.சா/தரப் பரீட்சை - 2011 நேரம் - 1 மணி

பிரபல ஆசிரியர்


# கல்வி முரசு

## கணிதம் -I பகுதி A

பாழ்.மாவட்டத்திலுள்ள 5 வலயங்களின் ஆசிரிய ஆலோசகர்கள், கற்பித்தல் செயற்பாட்டில் முன்னணியிலுள்ள ஆசிரியர்களால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்

**தரப்பட்டுள்ள எல்லா வினாக்களுக்கும் விடைதருக.**

01. குறித்த ஒரு கிராமம் ஒன்றில் உள்ள குடும்பம் ஒவ்வொன்றிலும் இருக்கும் பிள்ளைகள் தொடர்பாக நடத்தப்பட்ட மதிப்பீடு ஒன்றில் சேகரிக்கப்பட்ட தகவல்கள் பின்வரும் வென்வரிப்படத்தில் காணப்படுகிறது.





A - (ஆண் பிள்ளைகள் இருக்கும் குடும்பங்கள்)

B - (பெண் பிள்ளைகள் இருக்கும் குடும்பங்கள்)

i) பெண் பிள்ளைகள் மாத்திரம் இருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை யாது?
ii) ஆண் பிள்ளைகள் இருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை யாது?
iii) இம் மதிப்பீட்டுக்காகத் தகவல்களைச் சேகரிக்கப் பயன்படுத்திய குடும்பங்களின் எண்ணிக்கை யாது?
iv) ஆண் பிள்ளை அல்லது பெண் பிள்ளை இருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை யாது?
v) $n(P \cup Q)'$ இன் பெறுமானத்தைக் காண்க.

02.




"T" வடிவத்தில் உள்ள வளை ஒன்றின் குறுக்குவெட்டு வரிப்படத்தில் காணப்படுகின்றது.

1) அவ்வளையின் குறுக்குவெட்டின் சுற்றளவைக் காண்க.
2) அவ்வளையின் குறுக்குவெட்டின் பரப்பளவைக் காண்க.
3) அவ்வளையின் நீளம் 10cm எனின் அதன் கனவளவைக் காண்க.

03. ஒருவர் தமது வீட்டின் ஓராண்டு வாடகையை முற்பணம் பெற்றுக்கொண்டு அதனை வாடகைக்குக் கொடுத்தார். அவ்வீட்டின் ஆண்டு மதிப்பீட்டுப் பெறுமானம் ரூபா 26400 ஆகும்.

1) இப்பெறுமானத்தின் 15 வீதமானது மதிப்பீட்டு வரியாகக் கொடுக்கப்பட வேண்டியும் இருப்பின் முழு ஆண்டுக்கும் மதிப்பீட்டு வரியாகக் .கொடுக்கப்பட்ட தொகையைக் காண்க.
2) மதிப்பீட்டு வரியாகக் கொடுக்கப்பட்ட தொகை அவர் பெற்ற முற்பணத்தின் 11 வீதம் எனின், அவர் பெற்ற முற்பணம் யாது?
3) அவர் வீட்டுக்கு அறவிட்ட மாத வாடகை எவ்வளவு?

04. மாணவர் ஒருவனிடம் பருமனிலும் வடிவிலும் இயல்பொத்த 6 மின் குமிழ்களைக் கொண்ட ஒரு பை உள்ளது. இவற்றில் 2 மின்குமிழ்கள் சுட்டவையாகும். அவன் இம் மின்குமிழ்களிலிருந்து 2 ஐ ஒன்றன் பின் ஒன்றாக எழுமாற்றாகப் பிரதி வைப்பில்லாமல் (முதலாவது எடுத்த மின் குமிழை திரும்ப இடாமல்) தெரிந்தெடுக்கிறான்.


1) மின்குமிழைத் தெரிந்தெடுத்தலை வகைக்குறிக்கும் மரவரிப்படத்தை வரைக.
2) தெரிந்தெடுத்த இரு மின்குமிழ்களும் சுட்டவையாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?
3) ஒன்று மட்டும் சுட்டதாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?
4) ஏதாவது ஒன்று சுட்டதாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

05. குறித்த நிறுவனம் ஒன்றில் ஒருநாள் வேலையாளர்கள் தாமதமாக வந்தமை பற்றிப் பெறப்பட்ட தகவல்கள் பின்வரும் மீடிறன் பரம்பலில் காட்டப்பட்டுள்ளது.

| தாமதம் (நிமிடம்) | ந.பெ (x) | வேலையாளர் எண் (f) | f x x |
|---|---|---|---|
| 1 - 3 | | 4 | |
| 4 - 6 | | 5 | |
| 7 - 9 | | 9 | |
| 10 - 12 | | 12 | |
| 13 - 15 | | 7 | |
| 16 - 18 | | 3 | |


1) மேற்குறித்த அட்டவணையை உமது விடைத்தாளில் பிரதி செய்து x நிரலையும் fx நிரலையும் நிரப்புக.
2) அந்த நாள் தாமதமாக வந்த வேலையாளர்களின் மொத்த எண்ணிக்கை யாது?
3) இப்பரம்பலின் இடையைக் கணிக்க.
4) fx நிரலின் கூட்டுத்தொகை எதனைக் குறிக்கின்றதென எழுதுக.

06.





1) பெரிய அரைவட்ட வில் நீளத்தைக் காண்க.
2) சிறிய அரைவட்ட வில் நீளத்தைக் காண்க.
3) நிழற்றப்பட்ட உருவின் சுற்றளவு யாது?
4) நிழற்றிய உருவின் பரப்பளவு யாது?

07. தரப்பட்டுள்ள வென்வரிப்படத்தில் $n(E) = 50$, $n(B \cap C') = 9$, $n(B) = 7$, $(C' \cap A) = 25$, $n(A \cap C) = 13$ எனின் இவற்றை வென் உருவில் குறிக்க.




i) $n(A \cap B \cap C)$
ii) $n(C)$
iii) $(B' \cap A) \cap C$ ஐ நிழற்றுக.
iv) தொடை A யிற்கும் B யிற்கும் உள்ள தொடர்பைக் குறிப்பிடுக.

08.




உருவில் DE = EB
$A\hat{B}C = 50^\circ$ ADEC ஒருவட்ட நாற்பக்கல்
$A\hat{C}B$ ஐக் கணிக்க.

09. P (1/2, 3) Q(1, -3) R(-1, 4) ஆகிய புள்ளிகளில் எவை கோடு $2x + 3y = 10$ இல் கிடக்கின்றன.

10. 3, 5, 7 இன் பொ.கா.பெ யாது?

11. 2 லீற்றர் பெற்றோலின் விலை 240 ரூபா எனின், 500 மில்லி லீற்றர் பெற்றோலின் விலை யாது?


12. ஒரு பல்கோணியின் புறக்கோணம் $32^\circ$ எனின், அகக்கோணம் யாது?

13. $\frac{-4.5}{-1.5}$ சுருக்குக..

14. பெருக்குக. 0.0125 X 100




15.




உருவில் AB, AC யிலிருந்து சமதூரத்திலும் A, B யிலிருந்து சமதூரத்திலும் உள்ள ஒரு புள்ளி P ஐ ஒழுங்குகள் பற்றிய அறிவின் மூலம் பெறுக்காட்டுக.


16.




உருவின் சுற்றளவு யாது?


17. (a, b, c) என்னும் தொடையின் தொடைப் பிரிவுகள் எத்தனை?

18.




நிழற்றியது முழுவதின் என்ன பின்னம்?

19.





உருவில் AC இன் நீளம் யாது?

20. உருவில் அடுத்துள்ள கோணச் சோடி ஒன்று தருக.





21.




OA யின் திசைகோள் யாது?

22. தீர்க்க. $\frac{x + 11}{2} - 1 = 5$

23.




உருவில் X° இன் பெறுமானம் யாது?

24. சுருக்குக. $\sqrt{2}\ \{\sqrt{2} + \frac{1}{\sqrt{2}}\}$

25. $\lg 2 = 0.3010$ $\lg 3 = 0.4771$ எனின் $\lg 12$ ஐக் காண்க.


26. சுருக்குக. $\frac{12.3 - 1.23}{1.23}$

27. சுருக்குக. 2 2/3 ÷ [3/5 - 1/3]

28. $\sqrt{2} = 1.414$ எனின் $\frac{3}{\sqrt{2}}$ இன் பெறுமானம் யாது?

29. 30 km/h வேகத்தில் ஒரு குறித்த தூரத்தைச் செல்ல வண்டி ஒன்று 4 மணி எடுத்தது எனின், 3 மணித்தியாலத்தில் அதே தூரத்தைக் கடக்க எவ்வேகத்தில் செல்ல வேண்டும்?

30.




உருவில் O வட்ட மையம். OB யும் CD என்ற நாணும் M இல் செங்குத்தாக வெட்டுகிறது. OB = 5 cm CD = 8 cm எனின் OM ஐக் காண்க.

# நீரிழிவு நடனம்



உலகம் முழுவதும் நீரிழிவு (Diabetes) நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதற்குத் தீர்வு காண வேண்டும் என்று நடத்தப்படும் தொடர் ஆய்வுகளும் அதிகரித்துக் கொண்டுதான் வருகின்றன. இந்நிலையில் அமெரிக்க பென்சில்வேனியா கல்லூரியில் நடைபெற்ற ஆய்வில் நடனம் ஆடினால் நீரிழிவுநோய் குறைகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சிறிய குழந்தைகள் முதல் வயதானவர்கள் வரை அந்த ஆய்வில் உட்படுத்தப்பட்டனர். இதில் வாரத்துக்கு 4 மணி நேரம் முதல் 6 மணி நேரம் வரை நடனம் ஆடினால் மன அழுத்தம் நீங்கி மனம் லேசாகிறது, உடல் எடையும் கட்டுக்குள் இருக்கிறது, நீரிழிவு நோயின் தாக்கமும் குறைகிறது எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குழந்தைகள், பெரியவர்கள் சரி. தாத்தா, பாட்டியையெல்லாம் எப்படி நடனமாட வைக்கிறது?

# சம்பந்தரும் சாப்பாடும்!

'சம்பந்தருடன் உணவுண்ண கனடாவில் 100 டொலர்! லண்டனில் 50பவுண்ஸ்!' என்ற தலைப்பில், குத்தலாகச் செய்தி வெளியிட்டிருக்கிறது கூட்டமைப்பைச் சேர்ந்த மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான சுரேஷ் பிரேமச்சந்திரனின் ஆதரவு இணையத்தளம். சரிதம் இணையத்தின் செய்திப் பார்வையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் கலந்து கொள்ளும் நிகழ்வில் கலந்து கொண்டு அவருடன் அமர்ந்து உணவு உண்பதற்கு கனடா வாழ் புலம்பெயர் மக்கள தலா 100 டொலர் நிதி செலுத்த வேண்டும் எனவும் பிரித்தானியா வாழ் புலம் பெயர் மக்கள் தலா 50 பவுண்ஸ் நிதி செலுத்த வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

அமெரிக்காவின் உயர் மட்ட அழைப்பினை அடுத்து அமெரிக்காவிற்கான பயணத்தினை மேற்கொண்டிருந்த கூட்டமைப்பினரில் இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, சுமந்திரன் ஆகியோர் கனடாவிற்குச் சென்றுள்ளனர். பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கான அனுமதியினை கனேடிய உயர்ஸ்தானிகரகம் வழங்கவில்லை.

கனடா செல்லும் கூட்டமைப்பினருக்கான இராப் போசனத்திற்கான அழைப்பினை கனடா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிளை என்ற பெயரிலான அமைப்பு விடுத்திருக்கின்றது. இந்த அமைப்பினால் கனடா வாழ் புலம்பெயர் மக்கள் 600 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாகவும், நிகழ்வில் கலந்து கொள்வோர் தலா நூறு டொலர்களை செலுத்த வேண்டும் என்றும் அழைப்பிதழில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

அதேவேளை எதிர்வரும் ஆறாம் திகதி பிரித்தானியா செல்லும் கூட்டமைப்பினருக்கான விருந்துபசார நிகழ்வில் பங்கு கொள்ளவுள்ளவர்கள் தலா 50 பவுண்ஸ்களைச் செலுத்த வேண்டும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அல்லல்படும் மக்களுக்கு கைகொடுப்போம் என்று அழைப்பிதழில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற போதிலும் அங்கு சேர்க்கப்படும் நிதி எங்கு சென்று சேரும் என்பது யாருக்கும் தெரிவதற்கு வாய்ப்பில்லை. கடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்காக கனடாவில் சேர்க்கப்பட்ட நிதி தொடர்பிலான கணக்கறிக்கை இதுவரையில் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

அதேபோல கடந்த தேர்தல்களுக்காக தாம் சேகரித்து அனுப்பிய நிதி தொடர்பில் லண்டன் கூட்டமைப்புக் கிளையினர் லண்டனுக்கான பயணத்தினை மேற்கொண்டிருந்த கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனிடம் கேள்வி எழுப்பிய போது, அவ்வாறான நிதி தொடர்பில் தமக்கு எதுவுமே தெரியாது என்று சிறீதரன் தெரிவித் திருந்தமையும் குறிப்பிடத் தக்கது.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தின் போது ஐக்கிய தேசியக் கட்சியினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இரண்டு கோடி ரூபா நிதி வழங்கப்பட்டிருந்ததாக ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் ஊடாக தகவல்கள் வெளியாகியிருந்த போதிலும் அது தொடர்பிலான கணக்கறிக்கையும் கூட்டமைப்பினரிடம் இருப்பதாக தெரியவில்லை.

அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது இந்திய அரசினால் கூட்டமைப்பின் கட்சிச் செலவுக்காக எழுபத்தைந்து இலட்சம் ரூபா வழங்கப்பட்டிருந்ததாக தகவல் ஒன்று வெளியாகியிருந்தது. ஆனாலும் சபைகளில் போட்டியிட்டவர்களுக்கு தலா இரண்டாயிரம் ரூபா முதல் 10 ஆயிரம் ரூபா வரையிலேயே வழங்கப்பட்டிருந்தமை நோக்கத் தக்கது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை கட்சியாகப் பதிவு செய்து ஒற்றுமையை வலுப்படுத்தத் தவறி வருகின்ற கூட்டமைப்பு, ஒரு தொண்டு நிறுவனத்தினைப் பதிவு செய்வதற்கான முயற்சியினை இரண்டு ஆண்டுகளாக இழுத்தடிக்கின்ற கூட்டமைப்பு புலம் பெயர் மக்களின் பணத்தினைப் பெற்று என்ன செய்யப் போகிறது?

இவ்வாறு கேள்வி எழுப்பியிருக்கிறது சுரேஷ் ஆதரவு இணையத்தளம்.

# 7 ஆம் அறிவு போதி தர்மர்

போதிதர்மாவைப் பற்றிய பதிவுகள் அவரை குங்ஃபூ தற்காப்புக் கலையின் பிதாமகர் என்று காட்டுகின்றன. ஆனால் போதிதர்மா சீன தேசம் சென்றது குங்ஃபுவை உருவாக்குவதற்கு அல்ல, பௌத்த சமயத்தின் ஆன்மாவை அதாவது தியா னத்தை சீனாவிற்கு எடுத்துச் சென்றவர் அவர்.

தமிழகத்தில் இருந்து சீனா சென்ற போதிதர்மா (ஆம், போதிதர்மா ஒரு தமிழர!) மன்னர் "வூ-டி"யைச் சந்தித்த பிறகு யாங்க்ஸி நதியைக் கடந்து ஹெனான் பகுதி யின் மலைச் சிகரங்களில் உள்ள ஷாவொலின் மடலாயத்திற்கு வந்து சேர்கிறார். அங்கு தியானம் செய்துகொண்டிருந்த புத்த பிட்சுக்களைப் பார்த்தபோது அவருக்குப் பெரிதும் ஏமாற்றமாக இருந்தது. நாட்பட்ட பட்டினியாலும் தவத்தாலும் அவர்களின் தேகங்கள் வத்தலும் தொத்தலுமாக இருந்தன. ஆன்மிகவாதிகள் என்றால் இப்படி சோப்ளாங்கிகளாக இருக்க வேண்டும் என்று அவர்களின் மனதில் ஒரு தவறான கருத்து இருப்பதை அவர் கண்டார்.


போதிதர்மா, உடல் ஆராதனைக்கு உரியது என்னும் கருத்துடையவர். ஓர் ஆன்மகவாதிக்கு உடல் உறுதியா " இருக்க வேண்டும் என்பதை அந்த பிட்சுக்களுக்கு எடுதது்ச் சொல்லி அதற்கான செய்முறைகளை அவர்களுக்கு வகுத்துக் கொடுப்பதாக வாக்களிக்கிறார். அதற்காக அருகில் இருந்த ஒரு குகையில் ஒன்பது வருடங்கள் தியானம் செய்கிறார் போதிதர்மா. ஒன்பது வருடங்களும் அவர் ஒரு சுவரைப் பார்த்தபடி அமர்ந்து தியானம் செய்ததாகச் சொல்லப்படுகிறது.

போதிதர்மா அங்கிருந்து கிளம்பியபோது அந்த இடத்தில் இரும்புப் பெட்டி ஒன்றை விட்டுச் செல்கிறார். பிட்சுக்கள் அதைத் திறந்து பார்த்தபோது அதில் இரண்டு கிரந்தங்கள் இருந்தன. 'க்ஸி சுய் ஜிங்' (மஜ்ஜை சுத்திகரிப்பு) மற்றும் 'யி ஜின் ஜிங்' (தசைகளின் மாற்றம்) என்னும் நூல்கள் அவை. இவற்றில் முதல் நூலை போதிதர்மாவின் சீடரான "ஹய்கே என்பவர் எடுத்துக்கொண்டு அங்கிருந்து மறைந்து போகிறார். இரண்டாம் நூலை புத்த பிட்சுக்கள் எடுத்துக்கொண்டு அதில் இருந்த பயிற்சிகளை மாற்றியமைத்து ஷாவொலின் குங்ஃபூ கலையாக மாற்றிவிட்டார்கள்.

போதி தர்மா புத்தருக்கு அறுநூறு வருடங்கள் பின்னால் தோன்றியவர். அவர் சீனா செல்வதற்கு ஆறு நூற்றாண்டுகளுக்கு முன்பே பௌத்தம் அங்கே சென்றுவிட்டது. போதிதர்மா பௌத்த குரு-சிஷ்ய மரபில் இருபத்தெட்டாவது தலைமைக் குருவாக வருகிறார். ஸென் ஞானியான அவருடைய குரு ஒரு பெண் ஞானி! அவரின் பெயர் "ப்ரக்யதாரா". அவர்தான் போதிதர்மாவை சீனாவிற்குச் செல்லும் படி கட்டளையிட்டவர். போதிதர்மாவின் பணியால் பௌத்தம் தாவோவுடன் இணைந்து "ச்சான்" (chan) ஆகிப் பின்பு அது ஜப்பானில் "ஸென்" (zen) என்பதாக வடிவம் கொண்டுவிட்டது. இது ஒரு மகத்தான ஆன்மிகப் புரட்சி!

புத்தரைப் போலவே போதிதர்மாவும் ஓர் இளவர சர். அவர் பல்லவ மன்னனின் மகன் என்று சொல்லப்படுகிறது. புத்தரின் போதனைகளால் ஈர்க்கப்பட்ட போதிதர்மா அரச வாழ்வைத் துறந்து பௌத்த நெறியில் தீட்சை பெற்றுக் கொண்டார்.

அரச வாழ்வைத் துறந்து ஆன்மத் தேடலில் நாடோடியாகக் கிளம்புகிறேன் என்ற தன் முடிவை போதிதர்மா சொன்னபோது மன்னர் அவரைத் தடுத்தார்.



போதி தர்மா அவரை நோக்கி "சாவை விட்டும் என்னை நீங்கள் காக்க முடியும் என்றால் இங்கேயே இருக்கிறேன். உங்களால் அது முடியாது என்றால் நான் புறப்படுவதைத் தடுக்காதீர்கள்" என்று சொன்னார். எனவே கண்ணீரோடும் ஆசிகளோடும் மன்னர் தன் இளவரசனை அனுப்பி வைத்தார்.

ஓஷோவின் வார்த்தையில் சொல்வதென்றால் போதிதர்மா ஒரு கிளர்ச்சியாளர் (REBEL). அவருடைய அகப்பார்வை சடங்குகளின் தோலையும் சதையையும் எலும்பை யும் துளைத்து நேராக மஜ்ஜையைத் தொடுவது. மன்னர் வூஷடி சீனாவில் நிறைய புத்த மடாலயங்களைக் கட்டியிருந்தார், அதில் பல்லாயிரம் பிட்சுக்களுக்கு போஷகம் அளித்து வந்தார். எனவே அவர் தன் பௌத்தத் தொண்டினைச் சுட்டிக்காட்டி போதி தரமரிடம் கேட்டார், "மகாஞானியே! என்னுடைய இந்த தர்ம காரியங்களுக்காக சொர்க்கததில் நான் பெறப் போகும் சன்மானம் என்ன?" போதிதர்மா மிக நிதானமாகச் சொன்னார், "உங்களின் காரியங்களுக்கு எவ்வித நன்மையும் இல்லை. நீங்கள் நேராக நரகத்தில் தான் விழுவீர்கள்." மன்னருக்கு ஆத்திரமும் குழப்பமும் அதிர்ச்சியும் ஏற்பட்டது. பெயருககாகவும் புகழுக்காகவும் சுயநல எண்ணத்துடன் நிறைவேற்றப்படும் தர்ம காரியங்களுக்கு எந்த மதிப்பும் இல்லை என்பதைத்தான் அவர் அப்படிச் சுட்டிக்காட்டினார்.

போதிதர்மா தன் கடைசிக் காலத்தில் இமயமலைப் பகுதிக்குச் செல்ல விரும்பினார். ஹய்கோ என்னும் சீடனைத் தன் வாரிசாக அறிவித்தார். இதனால் அவர் மேல் மனத்தாபம் கொண்ட ஒருசில சீடர்கள் அவரின் உணவில் விஷம் வைத்து விட்டார்கள். அதை உண்ட போதிதர்மா "கோமா"வில் விழுந்தார். அவர் இறந்துவிட்டதாக அறிவித்து மடாலயத்திலேயே அவரைப் புதைத்துவிட்டார்கள். இது நடந்து சில நாட்கள் கழித்து சீனாவின் எல்லையில் அவர் நடந்து செல்வதை எல்லைக் காவல்காரன் ஒருவன் காண்கிறான். அவர் தன் கைத்தடியின் முனையில் ஒற்றைச் செருப்பைக் கட்டித் தொங்க விட்டிருப்பதைக் கண்டு அதற்கான காரணத்தை வினவுகிறான். 'மடாலயத்திற்குப் போய் என்னை நீ இந்தக் கோலத்தில் பார்த்ததாகச் சொல். விவரம் உனக்கே விளங்கும்' என்று போதிதர்மா அவனிடம் சொல்லிவிட்டு எல்லையைக் கடந்து இமயமலைக்குச் சென்றுவிட்டார். அந்தக் காவலன் மடாலயத்திற்குச் சென்று தான் போதிதர்மாவைப் பார்த்ததாகச் சொல்கிறான். அவர்கள் அவரின் கல்லறையைத் திறந்து பார்த்தபோது அதனுள் அவருடைய மற்றொரு செருப்பு மட்டும் கிடப்பதைப் பார்த்து அதிர்ச்சி அடைகிறார்கள். இப்படியாக போதிதர்மாவின் முடிவு சொல்லப்படுகிறது.

"மனதிலிருந்து விடுதலை அடைய வேண்டியதில்லை. மனதிற்குள் ஆழ்ந்து ஆழ்ந்து போய்க்கொண்டே இருங்கள். இறுதியில் மனமே புத்தராக இருப்பதைக் காண்பீர்கள். மனதின் எதார்த்த நிலையே ஞானம்தான்" என்பதுதான் அவரது போதனைகளின் சாரம். மனம் என்பது ஆறாம் அறிவாகச் சொல்லப்படுகிறது. ஏழாம் அறிவு என்பது மனத்திற்கு அப்பால் உள்ளதல்ல. மனம் தன் எதார்த்த நிலையை அடைவதாகும் என்று சொன்னவர் அவர். அந்த நிலையை அடையும்போது மனத்தின் உண்மையான ஆற்றல் வெளிப்படும். கால-இடத் தளைகளிலிருந்து விடுதலை கிடைக்கும்.

நன்றி: பிரபஞ்சக்குடில்

# சுவிஸ் வங்கியில் கறுப்புப் பணம் –சோனியா, ராகுல் மீது வழக்கு–



(புதுடில்லி)

கறுப்புப் பண விவகாரம் தொடர்பாக சோனியா, ராகுல்காந்தி ஆகியோர் மீது சட்டத்தரணி ஒருவர் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

சட்டத்தரணி மனோகர்லால் சர்மா என்பவர் உயர்நீதிமன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில் கூறப்பட்டிருப்பதாவது,

சுவிஸ் நாட்டில் ஒரு வங்கிக் கணக்கில் ஆயிரக்கணக்கான கோடி ரூபா முதலீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வங்கிக் கணக்கு சோனியா மற்றும் ராகுல்காந்திக்குச் சொந்தமானது என்ற சந்தேகம் உள்ளது. இந்தக் கணக்கு மீது இவர்கள் இருவரும் இதுவரை உரிமை கோரவில்லை என்றபோதிலும் இந்தச் சொத்துககள் இவர்களுக்குச் சொந்தமானதாக இருக்க வேண்டும் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

கடந்த தேர்தலின்போது தேர்தல் ஆணையத்திடம் தாக்கல் செய்த உறுதி மொழிப் பத்திரத்தில் இந்த விபரத்தை இருவரும் மறைத்து விட்டனர். எனவே, சுவிஸ் வங்கியில் உள்ள சம்பந்தப்பட்ட கணக்கு விபரங்களைப் பெற மத்திய அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட வேண்டும்.

அதேபோல சோனியா மற்றும் ராகுல் காந்தி ஆகியோர் தங்களது நிலையை விளக்கவும், அந்தக் கணக்கில் உள்ள பணத்தை இந்திய வங்கிக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிட வேண்டும் என அந்த மனுவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நேரில் ஆஜராக வேண்டுமா? ஜெயலலிதா மேன்முறையீடு

(சென்னை)

சொத்துக் குவிப்பு வழக்கில் நவம்பர் 8ஆம் திகதி மீண்டும் நேரில் ஆஜராக வேண்டும் என்று பெங்களூர் நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவுக்கு எதிராக தமிழக முதல்வர் ஜெயலலிதா உச்சநீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

முன்னதாக சொத்துக் குவிப்பு வழக்கு தொடர்பாக பெங்களூர் நீதிமன்றத்தில் ஒக்டோபர் 20 மற்றும் 21ஆம் திகதிகளில் ஜெயலலிதா நேரில் ஆஜராக வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. அந்த உத்தரவுக்கேற்ப அவரும் பெங்களூர நீதிமன்றத்தில் ஆஜராகி நீதிபதியின் கேள்விகளுக்கு பதிலளித்தார். எனினும் இன்னும் பல கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டியிருப்பதால் மீண்டும் நவம்பர் 8ஆம் திகதி ஆஜராகுமாறு ஜெயலலிதாவை பெங்களூர் நீதிமன்றம் கேட்டுக் கொண்டது.

இவ்வாறு மீண்டும் ஆஜராகுமாறு கேட்பது உச்சநீதிமன்ற உத்தரவை மீறுவதாகும் என ஜெயலலிதா தாக்கல் செய்துள்ள மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

## மீண்டும் வலுவடைகிறது "ஜெய் தெலுங்கானா" கோஷம்

### தொடரும் ரயில் மறியல் போராட்டம்

(ஐதராபாத்)




தனித்தெலுங்கானா கோரி டி.ஆர்.எஸ். கட்சி உட்பட பல்வேறு அமைப்புகள் இணைந்து நடத்தும் ரயில் மறியல் போராட்டம் நேற்று முதல் 3 நாட்கள் நடக்கிறது. ஆந்திர மாநிலும் முழுவதும் பல மாவட்டங்களில் நடந்து வரும் இந்த ரயில் மறியல் போராட்டத்தினால் 136 ரயில்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. 60 இற்கும் மேற்பட்ட ரயில்கள் மாற்றுப் பாதையில் விடப்பட்டுள்ளன.

நேற்றுக் காலையில் மறியலில் ஈடுபட புறப்படும் முன்பாக தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி கட்சித் தலைவர் சந்திர சேகரராவ் மற்றும் அவரது மகள், மகன் உட்பட ஏராளமானோர் கைது செய்யப்பட்டுள்ளனர். சில இடங்களில் ரயில் நிலையங்கள் சூறையாடப்பட்டது. வன்முறையில் ஈடுபட்டால் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என மாநில முதல்வர் கிரண்குமார் ரெட்டி மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். ரயில் மறியல் போராட்டத்தில் காங்கிரஸ் எம்.பி.க்களும் பங்கேற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தனித்தெலுங்கானா கோரி நடைபெற்ற வன்முறையில் துப்பாக்கிச் சூட்டிற்கு பலர் பலியாயினர். அரசு கட்டடங்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. இதனால் ரயில் மறியல் போராட்டத்தில் வன்முறை எதுவும் வெடிக்காமல் இருக்க கூடுதல் பாதுகாப்பிற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

## இளையராஜாவின் மனைவி காலமானார்



(சென்னை)

பிரபல இசையமைப்பாளர் இளையராஜாவின் மனைவி ஜீவா (வயது-58) மாரடைப்புக் காரணமாக சென்னையில் நேற்றுமுன்தினம் இரவு காலமானார்.

சென்னை தியாகராஜா நகரில் குடுமபத்தாருடன் வசித்து வந்த அவருக்குத் திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டது. உடனடியாக அருகிலுள்ள தனியார் மருத்துவமனையில் அவரைச் சேர்த்தனர். அங்கு அவருக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால் இரவு 10.40 மணியளவில் அவர் காலமானார்.

இசையமைப்புப் பணிகளுக்காக ஹைதராபாத் சென்றுள்ள இளையராஜாவுக்கு, ஜீவா மறைந்த தகவல் தெரிவிக்கப்பட்டது என இளையராஜாவின் சகோதரரும் இசையமைப்பாளருமான கங்கையமரன் தெரிவித்தார்.

இளையராஜா - ஜீவா தம்பதியருக்கு கார்த்திக் ராஜா, யுவன்சங்கர்ராஜா ஆகிய இரண்டு மகன்களும், பவதாரணி என்ற மகளும் உள்ளனர்.

மறைந்த அவரது உடலுக்கு தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி, தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின் மற்றும் தி.மு.க.நிர்வாகிகள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர். இதேபோல் திரையுலகைச் சேர்ந்த ஏராளமானோர் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

## கூடங்குளத்தில் மின்நிலையம் வேண்டாம் வை.கோ தலைமையில் உண்ணா நோன்பு

(சென்னை)




கூடங்குளம் அணுமின் நிலையம் அமைவதை எதிர்த்து, நவம்பர் 5ஆம் திகதி வை.கோ தலைமையில் ம.தி.மு.க.வினர் இடிந்தகரையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துகின்றனர். இது குறித்து ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில்,

கூடங்குளம் அணுமின் நிலையத்தால் எந்த ஆபத்தும் நேராது என்று ரஷ்ய நாட்டு நிபுணர்கள் மற்றும் இந்திய அணு சக்தி கமிஷன் தரும் அறிக்கைகளை மத்திய அரசு வெளியிட்டு வருகிறது.

இடிந்த கரையில் போராட்டம் நடத்தும் மீனவ மக்கள், தென் தமிழகத்தின் எதிர்காலத்தைப் பாதுகாக்க பட்டினிப் போர் நடத்துகின்றனர்.

கடலில் சீற்றம் ஏற்பட்டால் கூடங்குளம் அணுமின் நிலையத்தால் கற்பனை செய்ய முடியாத பேரழிவு ஏற்படும். கூடங்குளம் அணுமின் நிலையத்தை எதிர்த்து தென் மாவட்ட தலைநகரங்களில் நவம்பர் 5இல் ஆர்ப்பாட்டம் நடத்த பழ.நெடுமாறன் அழைப்பு விடுத்துள்ளார. எனவே, நவம்பர் 5ஆம் திகதி இடிந்த கரையில் எனது தலைமையில் உண்ணா விரதப் போராட்டம் நடத்தப்போவதாக வை.கோ அறிவித்துள்ளார்.

## தி.மு.க.வுக்கு எதிராகப் பிரசார யுத்தம் அணி திரட்டுகிறார் பரிதி இளம்வழுதி



(சென்னை)

தி.மு.க.வின் துணைப் பொதுச் செயலாளராக இருந்த முன்னாளர் அமைச்சர் பரிதி இளம்வழுதி தனது பதவியை இராஜினாமாச் செய்வதாக திடீரென அறிவித்துள்ளார்.

மு.க.ஸ்டாலினுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக அவர் பதவியினை இராஜினாமாச் செய்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில் தனது அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து பரிதி இளம்வழுதி செய்தியாளர்ளுக்கு பேட்டியளித்துள்ளார்.

நான் புகார் கொடுத்ததன் பேரில் 3 பேர் மீது கட்சித் தலைமை நடவடிக்கை எடுத்தது. ஆனால் என்னிடம் கலந்தாலோசிக்காமல் அவர்கள் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இதுதான் நான் இராஜினாமாச் செய்வதற்குக் காரணமாகும்.

அண்ணா அறிவாலயத்துக்கும், தலைவர் வீட்டிற்கும் நான் இராஜினாமாக் கடிதத்தை அனுப்பினேன். ஆனால் இந்தத் தகவல்கள் வெளியில் சென்றது எப்படி என்று எனக்குத் தெரியாது. தன் நெஞ்சரிவது பொய்யற்க பொய்த்தலின் தன்னெஞ்சே தன்னைச் சுடும் என்ற திருக்குறளை எனக்கு எதிராக செயற்படுகிறவர்களுக்குச் சமர்ப்பிக்கிறேன். எனது விவகாரத்தில் ஜனநாயகத்தின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கப்பட்டதா என்பது சம்பந்தப்பட்டவர்களின் மனச்சாட்சிக்குத் தெரியும்.

கட்சித் தலைமைக்கு என்னைப் பற்றித் தவறான தகவல்களைக் கூறியுள்ளனர். புகார் கூறியவர் எங்கிருந்து வந்தவர் என்று பார்க்காமல் அதனை அப்படியே நம்பி விடலாமா? கட்சியின் துணைப் பொதுச் செயலாளரான எனக்கே இந்த நிலை. கட்சியில் மற்றவர்களுக்கு என்ன மரியாதை இருக்கும்.

ஜனநாயகம் கடைப்பிடிக்கப்படாததால்தான் தி.மு.க.வில் அதிருப்பதியாளர்கள் அதிகரித்துள்ளனர். அவர்களை ஒன்று திரட்டி நீதி கேட்கப் போராடுவேன். புதிதாகக் கட்சி தொடங்கினால்தான் போராட வேண்டும் என்றில்லை.

கோழைகள் விலகட்டும். வீரர்கள் பணி தொடரட்டும் என்ற அண்ணாவின் வார்த்தைகளை தலைவர் கூறியுள்ளார். அவர் யாரை நினைத்து இதனைச் சொன்னார் என்பது எனக்குத் தெரியாது. நிச்சயம் என்னைப் பற்றிச் சொல்லியிருக்க மாட்டார். எனது வீரம் தலைவருக்குத் தெரியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## "தம்பி வெட்டோத்தி சுந்தரம்" திரைப்படத்துக்கு கிளம்புகிறது எதிர்ப்பு

(நாகர்கோவில்)



நடிகர் கரன், அஞ்சலி, சரவணன் நடித்த படம் "தம்பி வெட்டோத்தி சுந்தரம்". இதை கன்னியாகுமரியைச் சேர்ந்த வடிவுடையான் இயக்கியுள்ளார். இந்தப் படத்தில் குமரி மாவட்ட மக்களை இழிவுபடுத்தும் காட்சிகள் இடம் பெற்றுள்ளதாகக் கூறி, இதை வெளியிட ஒரு தரப்பினர் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இதன் படப்பிடிப்பு நடந்த போதே நடிகர், நடிகைகள் மீது களியக்காவிளை அருகே தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் காலை தமிழ்நாடு லைன்பால் அசோசியேஷன் சார்பில் இந்தப் படத்துக்கு எதிராக நாகர்கோவில் கலெக்டர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் பொலிஸார் அனுமதி வழங்கவில்லை. அசோசியேஷன் சட்ட ஆலோசகர் சஜீவ் கேசவன், தலைவர் டேவிட் ராஜ, செயலாளர் ஜோஸ் உட்பட சுமார் 25இற்கும் மேற்பட்டவர்கள் பேனர்களுடன் கலெக்டர் அலுவலக வாசலில் திரண்டனர். பொலிஸார் அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தினர். அப்போது ஆர்ப்பாட்டத்துக்கு வந்திருந்தவர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே வாக்கு வாதம் ஏற்பட்டது. இதனால் பரபரப்பு ஏற்பட்டது. பின்னர் அவர்கள், திரைப்படத்தை வெளியிடத் தடை விதிக்க கோரி பிரதேச செயலரிடம் மனுக் கொடுத்தனர்.

# ரஷ்ய ஜனாதிபதி ஒரு சர்வாதிகாரி வீசப்படும் குற்றச்சாட்டுக்கள்

உலகச் செய்திகள்



ரஷ்ய ஜனாதிபதி திமித்ரி மெத்வடேவ் சர்வாதிகாரிபோல செயற்படுவதாக செல் வாக்கு மிக்க மொஸ்கோவின் முன்னாள் மேயர் லூரி லுஸ்கோவ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

டிசம்பரில் தேர்தல்களை நடத்துவதற்கான தயார்படுத்தல்களை மேற்கொள்வது குறித்து அவர் விமர்சனம் வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ரஷ்யாவில் செல்வாக்கு மிக்க அரசியல்வாதியாக கருதப்படும் லூரி லுஸ்கோவ் ஒரு வருடங்களுக்கு முன்னர் பதவி நீக்கப் பட்டிருந்தார்.

அதன் பின்னர் லூரி லுஸ்கோவ் மற்றும் அவரின் பாரியார் ஆகியோர் ஊழலில் ஈடுபட்டதாக ரஷ்ய அதிகாரிகள் குற்றஞ்சாட்டி வருவதாக சர்வதேச தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

டிசம்பரில் நடைபெறவுள்ள தேர்தலானது சுதந்திரமாகவும், நியாயமாகவும் இருக்காது என்று பீ.பீ.சி யுடனான நேர்காணலின் போது அவர் கூறியுள்ளார்.அத்துடன் மேலும் பல குற்றச் சாட்டுக்களை அவர் பட்டியலிட்டுக்கூறினார்.

# அமெரிக்க நிதி உதவிகள் "யுனஸ்கோ"வுக்கு கிடைக்காது

## - பலஸ்தீனத்துக்கு அங்கத்துவம் வழங்கியதன் எதிரொலி

(வோஷிங்டன்)

ஐ.நா.அமைப்பான யுனஸ்கோவுக்கான அனைத்துவகையான நிதி உதவிகளையும் நிறுத்திக்கொள்ளப்போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

அதிகளவு பெரும்பான்மையுடன், பலஸ்தீனத்தை யுனஸ்கோவில் இணைந்துக் கொள்ளப்பட்டதை ஆட்சேபித்து அமெரிக்கா இந்த நடவடிக்கை எடுத்துள்ளது.

நிதி உதவியை இரத்து செய்வது தொடர்பான பிரேரணை அதிகளவான பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அமெரிக்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்பிரகாரம் யுனஸ்கோவிற்கு அடுத்த மாதம் வழங்கப்படவுள்ள 37 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதி உதவி நிறுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்க இராஜங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் கூறியுள்ளார்.

யுனஸ்கோ அமைப்பிற்கான வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தில் ஐந்தில் ஒரு பங்கினை அமெரிக்கா வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

1967 ஆண்டுக்கு முன்னரான பலஸ்தீனத்தை தனிநாடாக அங்கீகரிக்குமாறு கோரி, கடந்த செம்டெம்பர் மாதம் அந்த நாட்டு ஜனாதிபதி மொஹமூத் அப்பாஸ் ஐ.நா பாதுகாப்பு பேர வையில் பிரேரணையைச் சமர்ப்பித்திருந்தார்.

இதன்பின்னர் பலஸ்தீனத்தை உறுப்பு நாடாக இணைத்துக் கொண்ட ஐ.நாவின் முதலாவது முக்கிய முகவர் நிறுவனமாக யுனஸ்கோ பதிவாகியுள்ளது.

பலஸ்தீனத்திற்கு ஐநாவின் முழுமையான உறுப்புரிமையை வழங்குவது தொடர்பான வாக்கெடுப்பு பாதுகாப்புப் பேரவையில் இந்த மாதம் நடைபெறும் என தெரிவிக்கப்படுகின்றது.

யுனஸ்கோவில் பலஸ்தீனத்தை உறுப்பு நாடாக இணைத்துக் கொள்வது தொடர்பாக நேற்று முன்தினம் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் 107 நாடுகள் ஆதரவாகவும், 14 நாடுகள் எதிராகவும் வாக்களித்திருந்தன.

அமெரிக்கா, கனடா, ஜேர்மனி போன்ற நாடுகள் எதிராக வாக்களித்ததுடன், ரஷ்யா, சீனா, இந்தியா, பிறேசில், தென் ஆபிரிக்கா போன்றன நாடுகள் ஆதரவாக வாக்களித்துள்ளன.

பிரித்தானியா இதற்கான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இரண்டாவது எலிசபெத் மரணமடைந்தால் செய்தி வெளியிடுவது எப்படி

## இப்பொழுதே பயிற்சி வழங்குகிறது பி.பி.சி.

(லண்டன்)


இங்கிலாந்து ராணி இரண்டாவது எலிசபெத் மரணமடைந்தால் செய்தி வெளியிடுவது எப்படி என்று பி.பி.சி. ஸ்தாபனம் தனது பணியாளர்களுக்கு பயிற்சி வழங்கியுள்ளது. 2002ஆம் ஆண்டில் இங்கிலாந்து ராணி (குயின் மதர்) இறந்த போது அதை இங்கிலாந்து அரசு செய்தி நிறுவனமான பி.பி.சி வெளியிட்ட விதம் கடும் சர்ச்சைக்கு உள்ளானது.

அனுபவம் வாய்ந்த செய்தி வாசிப்பாளர் பீட்டர் சிசன்ஸ் பழுப்பு நிற கோட், பிரவுன் நிற டை அணிந்து ராணி மறைவை அறிவித்தார். அதுபோன்ற தவறு ஏற்பட்டு விமர்சனத்துக்கு உள்ளாகாமல் இருக்க, ராணி 2ஆம் எலிசபெத் மறைவை அறிவிப்பதற்கான பயிற்சியை பி.பி.சி தொடங்கி யுள்ளதாக தெரிகிறது.

இதற்கான போலி வீடியோ ஒளிபரப்பி ஊழியர்களுக்கு செய்தி வெளியிட பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இப்போது துக்க செய்தியை அறிவிக்கும்போது செய்தி வாசிப்பாளர்கள் அணிய வேண்டிய உடைகள் அலுமாரிகளில் இப்போது வைக்கப்பட்டுள்ளன. மற்ற நிகழ்ச்சிகள் ரத்து, தேசிய கீதம் ஒலிபரப்பு, வாழ்க்கை வரலாறு வீடியோ ஆகியவை பற்றியும் ஊழியர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குடியரசுக்கட்சி வேட்பாளர் மீது குவிகிறது பாலியல் குற்றச்சாட்டு

## - அமெரிக்காவில் சர்ச்சை



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் குடியரசுக் கட்சி வேட்பாளர் மீது பாலியல் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. அமெரிக்காவில் அடுத்த ஆண்டு (2012) டிசம்பரில் ஜனாதிபதி தேர்தல நடைபெற உள்ளது. அதில் ஜனநாயக கட்சி வேட்பாளராக ஜனாதிபதி ஒபாமா போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து குடியரசுக் கட்சி வேட்பாளராக ஹெர்மன் கெய்ன் களம் இறங்க முடிவு செய்துள்ளார். அதற்கான வேட்பாளர் தேர்வில் முன்னணியில் உள்ளார்.


கடந்த 1990ஆம் ஆண்டுகளில் இவர் நேஷனல் ரெஸ்டாரண்ட் அசோசியேசனின் தலைவராக இருந்தார். அப்போது அவர் தங்களிடம் பாலியல் உறவு வைத்து கொண்டதாக 2 பெண் ஊழியர்கள் புகார் கொடுத்துள்ளனர்.

ஆனால் இந்த புகாரை ஹெர்மன் கெய்ன் திட்டவட்டமாக மறுத்துள்ளார். நான் எந்த காலத்திலும் யாரையும் பாலியல் துன்புறுத்தல் செய்ததில்லை. என் மீது பொய் புகார் கூறப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் நான் போட்டியிடக் கூடாது என்பதற்காக என்மீது இதுபோன்ற அபாண்டமான குற்றச் சாட்டுகளை தெரிவித்துள்ளனர் என்றார்.

ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளர் தேர்வு போட்டியில் ஹெர்மன் கெய்ன் முன்னணியில் உள்ளார். தற்போது பாலியல் புகார் கூறப்பட்டதன் மூலம் அவரது செல்வாக்குப் பாதிக் கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒபாமாவை எதிர்த்து போட்டியிடும் குடியரசுக் கட்சி வேட்பாளர் தேர்தலில் அவருக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக கருதப்படுகிறது.

# மெய்தான் பாருங்கோ...

## விபரீதச் செய்கைகள்



சில விசயங்களை அலசி ஆராயாமல், அறிவு பூர்வமாச் சிந்தியாமல் எடுத்த எடுப்பில் கதைக்கிறதும், விமர்சிக்கிறதும் சிலபேர் என்ன பலபேருக்கு இருக்கத்தான் செய்யுது பாருங்கோ, இது அவையளுடைய பலவீனமாகவும் இருக்கலாம். அல்லாட்டி அறியாமையில எழும்புற செயற்பாடுகளாகவும் இருக்கலாம். கண்டியளே!இப்ப நான் இதில என்ன சொல்ல வாறன் எண்டால் ஒரு காரியத்தைப் பெறுகிறதுக்கு, அது அரசாங்க அலுவலாக இருக்கலாம்... அல்லாட்டி தனிப்பட்ட ஒரு காரியமாகவும் இருக்கலாம்... அந்த அலுவலைப் பெறுகிறதுக்கு சில தனிப்பட்ட ஆட்களை தனிப்பட்ட இடத்தில தனிவிஷேசமாகக் "கவனித்தால்' காரியங்களைச் சட்டுப்புட்டெண்டு முடிச்சுத் தந்திடுவினம்.இதைத்தான் லஞ்சம் கொடுத்துக் காரியத்தைச் சாதிக்கிறது. எண்டு சொல்லுறது.

அரசாங்க அலுவலகங்களிலும் சரி, வேறு எந்த தனியார் நிறுவனங்களிலும் சரி சாதாரண பியோனிலிருந்து உயர்மட்ட அதிகாரிகள் வரை சிலபேருக்கு கையுக்குள்ளை, அல்லது என்வலப்புக்குள்ளை ஏதேனும் ஐஞ்சைப் பத்தை வைச்சுக் குடுத்தால் தான் அவையளின்ர அகமும் புறமும் குளிர்ச்சியடையும்.

சில இடங்களில் ஒருநாளில ஒரு மணித்தியாலத்துக்குள்ள முடிக்கவேண்டிய அலுவலை ஒன்பது நாள் அல்லாட்டி ஒன்பது மாதங்கள்வரை இழுத்தடிக்கிற செயற்பாடுகளுக்கு சம்பந்தப்பட்ட ஆட்களின்ர உள்ளங்கை 'குளிர்ச்சி' அடையாமல் இருக்கிற காரணமாகவும் இருக்கலாம்?

இப்படியான சூழ்நிலை உருவாகக் காரணம் என்ன எண்டதை ஒருத்தரும் சிந்திச்சுப் பாக்கிறேல்லை. வசதியுள்ளவன் காசைக் குடுத்து அலுவலை முடிச்சால், வசதியில்லாத ஏழையள் லஞ்சப்பணத்துக்கு என்ன செய்யுங்கள்? லஞ்சம் வாங்கிற ஆட்களை விட, அந்த ஆட்கள் விரும்பாமல் அவையளுக்கு வில்லங்கமாக காசு களஞ்சை கையுக்கை வைக்கிற ஆட்களும் இருக்கினம் பாருங்கோ.

ஒரு சம்பவத்துக்கு அல்லாட்டி ஒரு பிரச்சினைக்கு தனிய ஒரு பக்கம் நிண்டு கொண்டு கதைக்கிறதால பிரச்சினைக்குத் தீர்வு வராது கண்டியளே. ஒரு அரசாங்க ஊழியனோ வேறு எந்த ஒரு நிறுவன அதிகாரியோ ஒரு அரச அலுவலுக்கு பொதுமக்களிடமிருந்து எந்த விதமான சந்தோஷ எதிர்பார்ப்புகளையும் எதிர்பார்க்க முடியாது அது அவையளின்ர கடமையில ஒரு பகுதியுமல்ல. அவையளின்ர உழைப்புக்கும் சேவைக்கும் அரசாங்கம் மாதாமாதம் வேதனம் குடுக்குது.

இந்நிலையில் அவையளுக்கு அவையள் செய்த ஒரு கடமைக்கு பொதுச்சனங்கள் வில்லங்கமா 'சந்தோஷம்' குடுக்குறது எல்லோரையும் பழுதாக்கிறது மட்டுமில்லை, இதயசுத்தியோடை தங்கட அலுவல்களைப் பாக்கிற ஆட்களையும் சந்தேகம் கொள்ள வைச்சிடும் பாருங்கோ.

நான் என்ன பிரச்சியைச் சொல்ல வாறன் எண்டால், இருந்தாப்போல எனக்கு ஒரு கண்பார்வை பிரச்சினையாப் போச்சுது. ஒரு அரசாங்க ஆசுப்பத்திரிக்குப் போன இடத்தில ஒப்பரேசன் செய்ய வேண்டிவந்திட்டுது. வார்ட்டில அஞ்சு நாள் தங்கியிருந்த நேரத்தில எனக்குப் பக்கத்தில இன்னுமொருவர் இருந்தார் அவர் தன்ர வருத்தத்தைச் சுகப்படுத்தி துண்டுவெட்டிக்கொண்டு போற அண்டைக்கு ஆசுப்பத்திரி அற்றெண்டன் ஒருத்துன்னு தனிப்பட்ட முறையில இருநூறு ரூபா காசு குடுக்க, அவன் அவரைப் பார்த்துச் சிரித்தான். அதுக்கு அவர் வாங்கிக்கொள்.. என்னுமாப் போல தலையை அசைக்க அவனும் அதை வாங்கி காற்சட்டைப் பொக்கெற்றுக்குள்ளை வைச்சுக்கொண்டு போயிட்டான்.

அந்த ஆசுப்பத்திரி ஊழியனுக்கும் காசுகுடுத்த அந்த ஆளுக்கும் எந்த உறவு முறையோ, குடுக்கல் வாங்கலோ இருந்ததில்லை. அந்தாள் வெளிநாட்டு வசதியுள்ள மனிசன். ஆசுப்பத்திரி ஊழியனிடம் கடனா காசு வேண்டவேண்டிய அவசியமும் அவருக்கு இல்லை.

இந்த இடத்திலதான் நாங்கள் கொஞ்சம் நிதானமாச் சிந்திக்கவேணும் பாருங்கோ. அரச சேவையில் உள்ள ஆட்களைப் பழுதாக்கிறது. ஆர்? அந்த ஆசுப்பத்திரி ஊழியன் தனக்குரிய கடமையை ஒவ்வொரு நோயாளிக்கும் பாரபட்சமின்றிச் செய்யேக்கை, ஒருசிலரது செய்கைகளால் ஆசுப்பத்திரி நிர்வாகம் சீர்குலையுறதோடை, திண்டுருசி கண்ட பூனை மாதிரி... இப்படியான செயற்பாடுகளின் நிமித்தம் எல்லாரும் 'பணம் விழுங்கும் பிசாசுகளாய்' தோற்றம் பெறுகிறதுக்கு வாய்ப்பிருக்குது கண்டியளே!

நோயைச் சுகப்படுத்தப் போனால் நோயைச் சுகப்படுத்திக் கொண்டு வீடு திரும்புறதை விட்டிட்டு, தனிப்பட்ட ரீதியில் தனிப்பட்ட ஒருவனை சந்தோஷப்படுத்த வெளிக்கிட்டால், நாளைக்கு புதுசா வாற ஒரு நோயாளியிட்டை அந்த ஆசுப்பத்திரி ஊழியன் காசுக்காக தன்ர கடமையைச் செய்ய வெளிக்கிடுவான் பாருங்கோ. இதனால மனச்சாட்சியின் படி வேலை செய்கிறவனுக்கு எவ்வளவு அந்தரிப்புகள்... அவமானங்கள் ஏற்படும் என்பதை உந்தக் 'காசுக்காரர்' புரிஞ்சுநடந்தால் நல்லாயிருக்கும் கண்டியளே!

- **சின்னக்குட்டி சின்னச்சாமி**



யாழ். மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் கணபதி இராசதுரை நினைவாக கவிஞர் சோ.பத்மநாதன் ஆற்றிய நினைவுப்பேருரை நேற்றைய தொடர்ச்சி...

# நமது கல்வி முயற்சிகள்: முடிவுறாத பயணங்கள்



### சமயக்கல்வி

இன்று எவரும் கற்பிக்கக்கூடிய பாடமாக அதிபர்கள் கருதுவது சமயத்தை. வேறு பாடங்கள் பயின்ற ஆசிரியர்களுக்கு நேரசூசி வரையும் போது, இரண்டு பாடம் குறைந்தால் அவருக்கு சமயம் தரலாம். "பாடப்புத்தகம் இருக்கு படிப்பியுங்கோ" என்பார் அதிபர். சமயம் வாசிப்புப் பாடமாகிவிட்டது. சமய நம்பிக்கை இல்லாதவர்கள் சமயம் கற்பிக்கக்கூடாது. இறைவழிபாட்டில் மூன்று நான்கு தேவாரங்கள் மாறி மாறி ஓதப்படுகின்றன. பிழையாகப் பாடப்படும் திருமுறைகள் திருத்தப்படுவதில்லை. "குற்றாயினவாறு" 'கொற்றவன் தன்னைக் கண்டுள்ளம் குளிர என் கண்கள் குளிர்ந்தனவே' "துள்ளுமத வேட்கைக் கணையாலே" என்ற பிழைகள் திருத்துவாரற்று பிள்ளைகள் நெஞ்சில் ஆழப்பதிந்துள்ளன.

சமயம் விஞ்ஞானத்தின் முன் நின்று பிடிக்காதெனப் பலர் நினைக்கிறார்கள். பிள்ளைகளும் நினைக்கலாம். சமய ஆசிரியர்கள் பாடநூல்களுக்கு அப்பால் தேட வேண்டும். "சமயம் இல்லாத விஞ்ஞானம் முடம், விஞ்ஞானமில்லாத சமயம் குருடு" என்ற ஜன்ஸ்ரைனின் கூற்றை ஆதாரம் காட்ட வேண்டும் . அல்லது "நான் இதுவரை தேடிக்கண்டவை கடற்கரையில் கிளிஞ்சில் பொறுக்கும் சிறுவன் தேடியவைக்குச் சமம்" என்ற நியூற்றனின் வாக்குமூலத்தை முன்வைக்கலாம்.

### ஆங்கிலக்கல்வி

ஆங்கிலக்கல்வியின் நிலையை நோக்கினால், அது சரிவையே சந்தித்து வருவது காணலாம். 1956 இன் எழுச்சி சிங்களத்தை முதன்மைப் படுத்தியது மட்டுமல்லாமல், ஆங்கிலம் தேவையில்லை. ஆங்கிலம் கற்பது தேசத்துரோகம் - ஆங்கில பாடத்தில் சித்தியடைவது கட்டாயமில்லை என்ற நிலைப்பாட்டை எடுத்ததால் இந்த வீழ்ச்சி ஏற்பட்டது. இந்தியா, ஹிந்தியை அரச கரும மொழியாக அறிவித்தாலும், ஆங்கிலம் இணைப்பு மொழியாகத் தொடர அனுமதித்ததால், இன்று அங்கு ஆங்கிலம் பயன்படுத்தப்படுகிறது. அதனால் மாணவர்கள் பயன் பெறுகிறார்கள். ஆங்கிலம் பேசுகிறார்கள். 2010 க.பொ.த சாதாரணதர தேர்வில் வடமாகாணத்தில் ஆங்கில பாடப் பெறுபேறுகளைத் தருகிறேன். யாழ்ப்பாணம் 40.92 வீதம், வலிகாமம் 28 வீதம், வடமராட்சி 34.16 வீதம், தென்மராட்சி 31.25 வீதம், தீவகம் 8.58 வீதம், கிளிநொச்சி 9.57 வீதம், முல்லைத்தீவு 14.51 வீதம்.

பெரும் பணச்செலவில் மேற்கொள்ளப்படும் இந்த முயற்சி தோல்வியில் முடிவது எதனால்? வகுப்பறையில் கற்கும் ஆங்கிலத்தை வெளியே பயன்படுத்த வாய்ப்பில்லை. போகும் இடமெல்லாம் தாய்மொழியே ஒலிக்கிறது. காதில் ஆங்கில மொழி விழாவிட்டால் பேச - உச்சரிக்க முடியாது. இதற்கு என்ன செய்யலாம்? இப்பொழுதுதான் எல்லா வீடுகளிலும் தொலைக்காட்சி உண்டே! தினமும் ஆங்கிலச் செய்திகளைக் கேட்க, பார்க்க வேண்டும். கிறிக்கெற் நேர்முக வர்ணனைகள் மிகுந்த பயனுடையவை. ஆனால் தமிழ்ச்சமூகம் மட்டரகமான தென்னிந்திய மெகா சீரியல்களிலும், திரைப்படங்களிலும், கட்டுண்டு கிடக்கிறது. அதை மீட்கவல்ல ரட்சகர் யார்?

ஆங்கில மொழி மூலம் கல்வி வழங்குவதில் மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். International Schools ஆங்காங்கே முளைத்துள்ளன. அரசாங்கப் பாடசாலைகள் இரு மொழிப் பாடசாலைகளாவதில முனைப்புக் காட்டுகின்றன. ஆனால் சமூகக்கல்வி, விஞ்ஞானம் முதலிய பாடங்களை ஆங்கிலத்தில் கற்பிக்க வேண்டிய ஆசிரியர்களுக்கு ஆங்கிலம் தெரியாது. பிள்ளைகளுடைய ஆங்கிலத்தேர்ச்சியோ மிகக் குறைவு. இந்நிலையில் குருடும் குருடும் குருட்டாட்டமாடிக் குழிவிழும் மோசடிக்கு நாம் துணை போக வேண்டுமா?

### தமிழ்க்கல்வி

ஒரு காலத்தில் பயிற்றப்பட்ட தமிழாசிரியர்களிடம தமிழ் கற்றவர்கள் தாம் தமிழறிஞர்களாக வலம் வந்தார்கள். அவர்கள் இலக்கண வரம்புகளைப் பேணினர். மணிகோர்த்தது போன்ற கையெழுத்து. தமிழ்ப் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் உடை, நடை, சமூகத்தின் ஒழுக்கத்துக்கு அவர்கள் காவலர்கள். இன்று தமிழ்ப் பட்டதாரிகளில் பலர் எழுதும் வசனங்கள் பிழைமலிந்து காணப்படுகின்றன. இன்றைய தமிழாசிரியர்களுடைய நடைஉடைகள் பற்றி சொல்ல என்ன இருக்கிறது?

### விஞ்ஞானக்கல்வி

தமிழ்க்கல்வி இவ்வாறாக, விஞ்ஞானக்கல்வியின் நிலையை நோக்கலாம். pre SSC என்று சொல்லப்பட்ட ஒன்பதாம் வகுப்பிலேயே ஆய்வு கூடத்தில் பரிசோதனை செய்ய நாம் ஆற்றுப்படுத்தப்பட்டோம்: செய்தோம். இன்று ஆய்வு கூடத்துக்குள் காலடி வைக்காமலேயே, க.பொ.த. (உ/த)தேறிப் பல்கலைக கழகம் செல்லலாம்.

### நல்லாசிரியர் என்பவர் யார்?

எங்களுடைய கல்லூரி வாழ்க்கையில் சந்தித்த ஆசிரியர்களுள் யாராவது ஒருவர் மிக ஆழமான மனப்பதிவை ஏறடுபடுத்தியிருப்பார்.அவர் மீது தனி மதிப்பு ஓர் ஒட்டுதல் ஏற்பட்டிருக்கும். அந்த உறவு வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து கொண்டிருக்கும்.

### யார் அந்த நல்லாசிரியர்?

யாரைச் சந்தித்த பிறகு உலகத்தை நீங்கள் முன்பு பார்த்தது போல் பார்க்கவில்லையோ, நீங்கள் குருவைச் சந்தித்துள்ளீர்கள் என்பது பொருள். மெத்தப் படித்த நரேந்திரன் என்ற இளைஞன் காளிகோயில் பூசாரி ராமகிருஷ்ணரைப் போய்ப் பார்க்கிறான். அவனுள் ஆயிரம் கேள்விகள் "வா மகனே, உனக்காகத்தான் காத்திருக்கிறேன்" என்ற ராமகிருஷ்ணர் அவன் தலை மேல் கையை வைக்கிறார். "பாரறியேன் விண்ணறியேன்" என்ற நிலை. நரேந்திரன் விவேகானந தராகி விட்டான்.

நல்லாசிரியன் சதா அறிவுத் தேடலில் ஈடுபட்டிருப்பான். "கற்றலை நிறுத்துகின்ற கணமே நீ ஆசிரியனாக இருக்கும் தகுதியை இழந்து விடுகிறாய்" என்கிறார் தத்துவஞானி ராதாகிருஷ்ணன்.

தன் மாணாக்கரிடையே சுதந்திர சிந்தனையை வளர்ப்பது ஆசிரியனுடைய கடமை. மாணவனைக் கேள்விகேட்க ஊக்குவிக்க வேண்டும். அதுதான் சோக்கிரதீஸ் பயன்படுத்திய உத்தி. அதுதான் Dr சிவப்பிரகாசம் கையாண்ட முறை. இன்று நாம் காண்பதென்ன?

கேள்வி கேட்கும் மாணவர்களை ஆசிரியர்கள் விரும்புவதில்லை. பல்கலைக்கழகங்களிலும் நிலைமை இதுதான். பிறகெப்படி சுதந்திரச் சிந்தனை முகிழ்க்கும்? தன்னம்பிக்கை கொண்ட ஆசிரியன் மாணவர்களின் கேள்விக்கு அஞ்சான். அதற்கும் அப்பால், தனக்குத்தெரியாததை "தெரியாது!" என்று சொல்லும் திராணி ஆசிரியனுக்கு வேண்டும். அந்த நேர்மையை மாணவர் மதிப்பர்.

"பிள்ளைகளை நேசிப்பவனாய், ஒவ்வொரு பிள்ளையும் பெறுமதி மிக்க பிரஜையாய் வரக்கூடியவன் என்று நம்புவோனாய், பிள்ளைகளுடைய இன்ப துன பங்களில் பங்கு கொள்பவனாய், குழந்தை உள்ளம் எவ்வாறு தொழிற்படுகிறது. என்பதை விளங்கிக் கொண்டவனாய், அதற்கு மேலே தானும் ஒரு காலத்தில் குழந்தையாய், இருந்ததை மறவாதவனாய் இருப்பவனே நல்லாசிரியன்" என்கிறார் ரஷ்ய கல்வியாளர் ஸுக்கோமிலின்ஸ்கி.

எவ்வளவு பெரிய பொறுப்பு! இந்நாளைய ஆசிரியர்களுக்கு, தாம் கற்பிக்கும் பாடப்பரப்புக்கும் அப்பால், மாணவர்களுடைய தனிப்பட்ட பிரச்சினைகளுக்கு செவிசாய்க்க, அவர்களுக்கு அறிவுரை கூற, அவர்களுக்கு வழிகாட்ட அவகாசம் உண்டா?

### பாடசாலை அனுமதி

பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு அனுமதி பெறுவதற்குப் பெற்றோர் படாத பாடு படுகிறார்கள். தம்பிள்ளைகளுக்கு அதிகபட்ச கல்வி வசதி கிடைக்கக்கூடிய பாடசாலைகளை நாடுவதில் தவறில்லை. அரசாங்க உதவி பெறும் பாடசாலைகளுக்கு தமது கட்டடங்கள் முதலியவற்றைப் பராமரிக்கும் செலவினம் உண்டு. அவர்கள் பெற்றோரிடம் நன்கொடை கோருவதைக்கூட நியாயப் படுத்தலாம். இலவசக் கல்வியின் நோக்கத்தையே சிதறடிக்கும் இவ்விழிசெயலில் இலவசக்கல்வி பெற்று முன்னேறியவர்களே ஈடுபடுகின்றனர். ஆனால் அரசாங்க பாடசாலைகள் பகிரங்கமாகவே நன்கொடை கோருகின்றன. வன்னியில் அடியுண்டு வந்த பிள்ளைகளிடம் நன்கொடை கோரிய அதிபர்களை நான் அறிவேன். பாடசாலை அபிவிருத்திச் சபை இந்த ஊழலுக்குக் கேடயமாக இயங்குகிறது. தேசியப் பாடசாலைகளிற்கூட இதற்குக் கணக்குக் கிடையாது. அவ்வப்போது கல்வியமைச்சர் நன்கொடை வசூலிக்கும் அதிபர்களை எச்சரிப்பார். ஒருமாதத்திற்கு முன் வட மாகாண கல்விப்பணிப்பாளர் நன்கொடை பெறுவது சட்டவிரோதம் எனப் பத்திரிகைக்கு அறிக்கை விட்டார். அதற்கு மேல் தொடர் நடவடிக்கை இருக்காதென்பது மட்டும் அனுபவரீதியாக நாம் கண்ட உண்மை.

கல்வியின் பெரும்பயனாக ஒருவனுக்குப் பணிவு வேண்டும். ஆனால் படித்தவர்கள் செருக்குடையவர்களாய், நேர்மையற்றவர்களாய், மோசடிப்பேர்வழிகளாய் இருக்கக் காண்கிறோம். பாமரர்கள் பழி பாவங்களுக்கு அஞ்சியவர்களாய், நல்லவர்களாய், பேராசையற்றவர்களாய் வாழ்கிறார்கள்.

"கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்
கற்றும் அறிவில்லாத என் கன்மத்தை
என்சொல்கேன் மதியை என்
சொல்லுகேன்" என்று கதறுகிறார் தாயுமானவர்.

### பண்பாட்டு வீழ்ச்சி

அன்புக்குரியவர்களே தமிழர் சமூகம் அளவுக்கதிகமாக வணிகமயப்பட்டு விட்டது. எமது முன்னோர்கள் மதித்துப் பேணிய விழுமியங்களைக் கைநெகிழ விட்டு விட்டு பொருளை நாடி ஓடிக்கொண்டிருக்கிறது. ஆலயங்கள் கூட அறங்காவலர்களின் - உபயகாரர்களின் பேரும் புகழும் பிரகாசிக்கும் களங்களாகத் தாழ்ந்து போயுள்ளன. இந்த ஓட்டத்தில் சமயச்சடங்குகள் செய்யும் அந்தணர்கள் முன்னே நல்ல lead எடுத்து ஓடிக்கொண்டிருக்கிறார்கள். நல்லறங்களை நல்லொழுக்கத்தை - இளைய தலைமுறைக்கு எடுத்துச் செல்ல அவர்களுக்கு நேரமில்லை.

இளைய தலைமுறை TV கலாசாரத்தில் மூழ்க்கிக் கிடக்கின்றது. ஆறுமுகநாவலரோ அப்துல் கலாமோ அவர்களை ஈர்க்கவில்லை. கனவுத் தொழிற்சாலையான சினிமாவில் பவனிவரும் நாயக நாயகியா இவர்கள் கற்பனையை, பேச்சை, மூச்சை ஆக்கிரமித்துள்ளனர். தமிழ்ச்சினிமா வன்முறையையும், பாலுணாவையும் வளர்க்கிறது. இந்த நச்சுச்சூழலிலிருந்து நம் இனம் மீள வழியுண்டா?

இரண்டு வாரத்திற்கு முன் மன்னாரில் நடந்த கருத்தரங்கொன்றில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் ரதிதரன் ஒரு கேள்வியை எழுப்பினார். எமது பண்பாட்டின் வீழ்ச்சிக்குக் காரணம் என்ன? சபையில மௌனம், அவரே பதிலையும் தந்தார். Cell-phone. தொலைத்தொடர்பில் ஏற்பட்டுள்ள பெரும் முன்னேற்றத்தால், எவர் கையிலும் Cell. இது இளந்தலைமுறையினரிடம் ஏற்படுத்தும் பாதிப்பை சீரழிவை பெற்றோர்கள் சிந்திக்க வேண்டும். போருக்குப் பிந்திய வடபுலம் துஷ்பிரயோகமும் இளவயதுப் பெண்கள் கருவுறுதலுமாகச் சீரழிகின்றது. மாவட்டச் செயலாளரிடமும், சிறுவர் நன்னடத்தை அலுவலர்களிடமும் இருக்கும் தகவல்கள் அதிர்ச்சி தரக்கூடியவை. பெறறோர்களே! உங்கள் பிள்ளைகள் இணையத்தளத்தில் புகுந்து என்ன செய்கிறார்கள் எனக் கண்காணியுங்கள். சீலை முள்ளில் பட்டாலும் முள் சீலையில் பட்டாலும் கிழிவது சீலைதான்.

### நிறைவு

அன்புக்குரியவர்களே! நான் இங்கு முன்வைத்த கருத்துக்கள் சிலருக்கு உவப்பானவையாய் இல்லாதிருப்பின் என்னை மன்னித்துவிடுங்கள். இராசதுரை என்ற கல்விமானுக்கு நான் விசுவாசமாய் இருக்க வேண்டும். அதற்கும் மேலே எனக்கு நான் விசுவாசமாய் இருக்கவேண்டும். "தன்நெஞ்சறிவது பொய்யற்க!" இப்பேருரையைக் குருதேவர் தாகூரின் வேண்டுதலோடு நிறைவு செய்வது பொருத்தமாய் இருக்கும்.

"எங்குமனத்தில் அச்சம் ஒழியத்
தலைநிமிர்ந்தே உள்ளதோ,
எங்கு அறிவுத்தடை இல்லையோ,
எங்கு உலகம் குறுகிய சுவர்களால்
துண்டாடப் படவில்லையோ,
எங்கு சத்தியத்தின் ஆழத்திலிருந்து சொற்கள்
பிறக்கின்றனவோ,
எங்கு சலியாத முயற்சி செம்மையை நோக்கி
தன் கைகளை நீட்டுகிறதோ,
எங்கு பகுத்தறிவு என்னும் தெளிந்த நீரோடை
காலாவதியான வளக்காறு என்ற வறண்ட
பாலையுள் வழிதவறிப் போகவில்லையோ,
எங்கு மனம் சதா விரிந்து கொள்ளும்
சிந்தனையையும் செயலையும் நோக்கி
உன்னால் வழிநடத்தப்படுகிறதோ,
அந்த சுதந்திர சுவர்க்கத்துள், என் அப்பனே,
என் நாடு விழிப்புறுவதாக!

# கைத்தொலைபேசியால் வந்தது வினை கட்டிப் புரண்டனர் இருவர்



யாழ். போதனா வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரும், நோயாளியை விடுதியில் வைத்திருந்த இளைஞர் ஒருவரும் நிலத்தில் புரண்டு புரண்டு மோதிக்கொண்டனர்.

நேற்றுமாலை இடம்பெற்ற கைகலப்பில் காயமடைந்த இருவரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அதேவேளை சம்பவம் தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது,

வெளிநோயாளர் பகுதியில் தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்த இளைஞர் ஒருவரை காவல் பணியில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் அணுகி குறிப்பிட்ட இடத்தில் நின்று தொலைபேசியில் உரையாட வேண்டாம் எனக் கேட்டுள்ளார். குறித்த இளைஞர் தான் வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் நோயாளி ஒருவரை வைத்து பராமரிப்பதாகக் கூறியுள்ளார்.

தொடர்ந்து வாய்த்தர்க்கம் முற்றி, இளைஞர் பாதுகாப்பு உத்தியோகத்தரை தாக்க ஆரம்பித்து விட்டார். இருவரும் நிலத்தில் புரண்டு ஒருவருக்கு ஒருவர் அடித்துக் கொண்டனர். (எஸ்)

## இறந்த குழந்தையை எறிந்த தாய் கைது

கண்டி - கட்டுகஸ்தோட்ட - அக்குரணை பகுதியில் குழந்தையை பெற்ற வேளை அது இறந்த நிலையில் இருந்ததால் ஆற்றில் எறிந்து விட்டுச் சென்ற தாயை பொலிஸார் கைது செய்துள்ளனர். கட்டுகஸ்தோட்ட பொலிஸார் நேற்றுப் பகல் குறித்த தாயை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட தாய் நீதிமன்ற உத்தரவின் பேரில் கண்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். கண்டி - கட்டுகஸ்தோட்ட - அக்குரணை நகரில் பிகாம்ப ஓயாவில் பிறந்து இறந்த குழந்தை ஒன்றின் சடலம் நேற்றுக் காலை 7.35 மணியளவில் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# விபத்தில் காயமுற்ற வயோதிபப் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

வீதியால் சென்றுகொண்டிருந்த வயோதிபப் பெண் ஒருவர் மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். தீவிர சிகிச்சைக்குட்படுத்தப்பட்ட போதிலும் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை 9.00 மணியள்வில் சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கிக்கு முன்பாக இடம்பெற்ற இவ்விபத்துச் சம்பவத்தில் சுன்னாகம் மாவெளி பகுதியைச் சேர்ந்த கிருஸ்ண பிள்ளை சரஸ்வதி (வயது - 80) என்ற வயோதிபப் பெண் படுகாயமடைந்தார்.

இவர் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு நேற்று முன்தினம் காலை 11.00 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி மாலை 4.30 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

சடலம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டது. (எஸ்)

## தீர்வைப் பெற்றுக்...

தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு கூறினார். இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:

போர்க் காலத்தின் போது புலிகளுக்கு இந்தியா பயிற்சிகளை அளித்தது. அதேபோன்று, புலிகளின் தலைவர் கொல்லப்பட்ட பின்னரும் அதே இந்தியாதான் மௌனம் காத்தது. போரின் பின்னரான இலங்கைத் தமிழர்களின் விடயங்களில் இந்தியா தலையிடவே இல்லை. விசேடமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசு பேச்சுகளில் இந்தியா எவ்வகையிலான அழுத்தத்தையும் இதுவரை பிரயோகிக்கவேயில்லை.

அத்துடன், இலங்கை மீதான சர்வதேச குற்றச்சாட்டுகள் விடயத்திலும் இந்தியா மௌனியானது. அப்படியிருக்க, இலங்கைத் தமிழர் விவகாரத்தில் தனக்கு பற்று இருப்பதாக இந்தியா பொய்வேடம் தரிக்கிறது. இந்த நிலையில், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை வழங்கவிடாது இலங்கை அரசை இந்தியா தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறது. இலங்கை அரசுக்கும், இந்திய அரசுக்கும் உள்ள இந்த இரகசிய ஒப்பந்தத்தால் இறுதியில் இலங்கைத் தமிழர்களே பாதிக்கப்படுவர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்கும் இடையில் இனப்பிரச்சினைப் பேச்சு ஆரம்பமாகி இன்றுடன் 10 மாதங்களாகின்றன. இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்கும் கடப்பாடு அரசுக்கு உள்ளபோதிலும், அதனை வழங்கவிடாமல் இந்தியா முட்டுக்கட்டை போடுவதனால் அதிருப்தியும், நம்பிக்கையின்மையும் அடைந்திருக்கும் தமிழ்க் கூட்டமைப்பு இந்தியா தவிர்ந்த வெளிநாடுகளது உதவியைக் கேட்டுச் சென்றுள்ளது. வெளிநாடுகளினால் இதற்கு அர்த்தம் வழங்க முடியாது. தமிழ்க் கூட்டமைப்புக்கும் வேறு வழியில்லை. இனப்பிரச்சினை தொடர்பில் இந்தியாவும்கையை விரித்துவிட்டது. எனவே, தீர்வைப் பெற்றுக் கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி, அரசு உட்பட உள்நாட்டு அரசியல் கட்சிகளுடன் கூட்டமைப்பு ஒன்றுசேர்ந்து பேச்சு நடத்த முன்வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஒருங்கிணைப்புக் குழுக்...

15 ஆம் திகதி மரம் நாட்டு விழா மாகாண சபையூடாக முன்னெடுக்கப்படவுள்ளதுடன் அதற்கான நிதியை ஆளுநர் வழங்குவதெனவும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் ஆனையிறவு உப்பளம், அச்சுவேலி தொழிற்பேட்டையை மீளவும் இயக்குவதனூடாக இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்க முடியுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இரண்டு மாவட்டங்களிலும் குடியிருப்பு இல்லாத மக்களுக்கு தற்காலிக வீட்டுத்திட்டம் வழங்குவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டதுடன், கூரைத்தகடுகளைப் பெற்றுக்கொடுக்கவும் கவனம் செலுத்தப்பட்டது. தொடர்ச்சியாக மழை பெய்து அனர்த்தம் ஏற்பட்டால் மக்களுக்கான வெள்ள நிவாரணத்தை வழங்குவது குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் வாழ்கின்ற மக்களது நலன்களில் பிரதேச செயலர்கள் தீவிர கவனம் செலுத்த வேண்டும். அத்துடன் மீள்குடியேற்றம் செய்யப்படாதுள்ள பகுதிகளை தமது சொந்த இடங்களாக கொண்ட பெரும்பாலான மக்களுக்கு குடியிருப்பு, மலசலகூட வசதிகள், நிவாரணம் உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகளை நிவர்த்தி செய்வதிலும் கவனம் செலுத்த வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் பணிப்புரை விடுத்தார்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி மாவட்ட பிரிவினர் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய, புதிய காணியொன்றைப் பெற்றுத்தருவதாகவும் அமைச்சர் உறுதியளித்தார்.

இரண்டு மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து இரண்டு மாவட்ட அரசாங்க அதிபர்களும், விரிவாக புள்ளி விபரங்களுடன் விளக்கினர்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்திற்கான அபிவிருத்திக் குழுக் கூட்டத்தை அந்த மாவட்டத்தில் நடத்துமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் குழுவின் கவனத்திற்கு கொண்டுவந்ததையடுத்து, எதிர்வரும் டிசம்பர் மாதம் 29 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத்தில் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடத்தப்படுமெனவும் அமைச்சர் அறிவித்ததுடன், யாழ். மாவட்ட கூட்டத்தையும் டிசம்பரில் நடத்த ஆலோசிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

நேற்றைய கூட்டத்தில் ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன், சரவணபவன், ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன், அரசாங்க அதிபர்களான இமெல்டா சுகுமார், ரூபவதி கேதீஸ்வரன், யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா, வடமாகாண பிரதம செயலாளர் சிவசுவாமி, ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், திணைக்களத் தலைவர்கள், இராணுவ, பொலிஸ் அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (பா)

## மதில் சரிந்து...

பணியாளர் உடனடியாக மன்னார் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சடலத்தை வைத்தியசாலைக்கு வந்து பார்வையிட்ட மன்னார் நீதவான் கே.ஜீவராணி பிரேத பரிசோதனை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

## தந்தை...

மற்றும் இராணுவ உயரதிகாரிகளின் ஏற்பாட்டில் நடந்த இந்த நிகழ்வில் இராணுவத்தின் 222 ஆவது படையணியின் பிரிகேடியர், திருகோணமலை பிரதிப் பொலிஸ் மா அதிபர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் பங்குபற்றினர்.

இந்நிகழ்வில் நகரசபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## போர்க்குற்ற...

பான் கீ மூன் நிபுணர்குழுவின் அறிக்கையை ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளருக்கும், ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கும் அனுப்பியிருந்தார்.

இலங்கையில் நிலையான அமைதிக்கு குற்றங்களுக்கு பொறுப்புக் கூறப்படுவதும், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதும், அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதும் அவசியமானது என்று ஐ.நா பொதுச் செயலர் இதன்போது குறிப்பிட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கடந்த செப்ரெம்பர் 23 ஆம் திகதி ஜனாதிபதி மகிந்தவைச் சந்தித்த போதும் ஐ.நா பொதுச் செயலர் பான் கீ மூன், பொறுப்புக் கூறும் நம்பகமான தேசிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

இதற்கிடையே இலங்கை அரசாங்கம் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்கியிருப்பதாகவும் ஐ.நா தகவல் கூறியுள்ளது.

இந்தநிலையிலேயே, இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பாக அனைத்துலக விசாரணையை நடத்துவது தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் பேரவையும், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரும் முடிவு செய்யவுள்ளதாக ஐ.நா தகவல் மேலும் கூறியுள்ளது.

## ஆணைக்குழு...

எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை.

பொதுநலவாய மாநாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் மாநாட்டில் கனேடிய வெளிவிவகார அமைச்சர் இலங்கை பிரச்சினைகள் தொடர்பில் பிரசாரம் செய்வதற்கு முற்பட்ட போதும் அதற்கு 15 நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்தன.

ஜனாதிபதிக்கு எதிராக அவுஸ்ரேலியாவில் விசாரணை மேற்கொள்ள எடுக்கப்பட்ட தீர்மானம் பின்வாங்கப்பட்டமை, 2013 ஆண்டு இலங்கையில் பொதுநலவாய மாநாட்டை நடத்துவதற்கு அங்கத்துவ நாடுகள் அனைத்தும் இணக்கம் தெரிவித்தமை போன்ற முக்கிய பிரதான காரணங்கள் இலங்கைக்குப் பெரும் வெற்றியைத் த[illegible]துள்ளன.

பொதுநலவாய மாநாட்டில் இலங்கை பங்குபெறுவதற்கு எதி[illegible]புத் தெரிவித்து பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் நாம் அ[illegible] கலந்துகொண்டு பெரும் வெற்றி கண்டுள்ளோம் என்றார்.

இந்நிலையில் உள்நாட்டுப் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தாலும் உள்நாட்டு பிரச்சினையை உள்நாட்டு அரசாங்கம் தான் தீர்க்க முடியும். நாம் ஒருபோதும் சர்வதேசத்திற்கு அடிபணிய போவதில்லை என்றும் இதன்போது அவர் சுட்டிக் காட்டினார்.

## தமிழர்களின் ஏக....

அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் லீன் பாஸ்கோ மற்றும் பான் கீ மூனின் தலைமை அதிகாரி விஜய் நம்பியார் ஆகியோரிடமே மகிந்த சமரசிங்க இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் தமிழ் மக்களின் சார்பில் குரல் கொடுப்பதற்கு பல அரசியல் கட்சிகள் இருப்பதாக அவர்களிடம் கூறிய மகிந்த சமரசிங்க, அக்கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டுக்கு மாறான கொள்கைகளைக் கொண்டிருப்பதாக கூறியுள்ளார்.

எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுடன் ஐக்கிய நாடுகள் சபையின் சார்பில் பேச்சுவார்த்தை நடத்தும் போது அவதானமாக இருக்க வேண்டும் என இவர்களிடம் அமைச்சர் மகிந்த சமரசிங்க வலியுறுத்தியுள்ளார்.


அத்துடன், இலங்கையின் தென்பகுதியில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகளுடனும் ஐக்கிய நாடுகள் சபை கலந்துரையாட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் போது வன்னி மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 38.96 சதவீதமான வாக்குகளும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 35 சதவீதமான வாக்குகளும் கிடைத்ததாக அவர் தனது கோரிக்கைக்கு காரணம் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று திருகோணமலை மாவட்ட்த்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 23.81 சதவீத வாக்குகளையும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 42.78 சதவீத வாக்குகளையும் பெற்றிருந்ததாக இவர்களிடம் அமைச்சர் மகிந்த சமரசிங்க கூறியுள்ளார்.

## செய்திப்பரணம்

**பாதுகாப்புச் செலவினம் பன்மடங்காய் அதிகரித்தால்
ஏதுநாட்டு அபிவிருத்தி? எதற்குமாம் - வாதுசெயும்
எதிர்க்கட்சி இவ்விடத்து எடுத்தியம்பல் ஏற்புடை
புதியவரலா றெழுதிச்செல் புதிர்!**



12 ஆம் ஆண்டு



நினைவழியா நாளீ...



அமரர்
அற்புதன்
-தினமுரசின் ஸ்தாபகரும் ஆசிரியரும்-
தோழர்-ரமேஷ்
நடராஜா அற்புதராஜா
உதிர்வு:-1999.11.02
முகவரி:-அராலி மத்தி,
வட்டுக்கோட்டை,
யாழ்ப்பாணம்.

அன்னைத் தமிழை -எழுத்தால்
அணிபூட்டி
வண்ணப் பேரழகியாய்
வரிசைபெற வைக்க எண்ணி
உண்மையுடன் உழைத்தவனே!

நாடழிந்து நலிவடைந்து
நாதியற்றுக் கிடக்கின்ற
நற்றமிழ் அன்னையினை
நானிலந்தன்னில்
கொற்றமொடு கொலுவைக்க
தக்கதொரு வழிதேடி
உற்ற தோழர் தனை நாடி
உவப்புடனே சேர்த்து நின்றவனே!

ஈராறு ஆண்டுகள்
கரைந்தோடிப் போனாலும்-உம்
ஈரமான நினைவுகள் - எம்
இதயத்தை வதைக்குதய்யா
பூதவுடல் பூமிக்கடியில்
விதைக்கப்பட்டதால்
பெரு விருட்சமாய் - எம்
மனங்களில் வாழ்பவரே!
உம் கனவுகளை
எம்மில் சுமந்து
உம் தடத்தில் எம் பணி
தொடரும்...

தினமுரசு
-குடும்பத்தினர்-


# நாடாளுமன்ற உறுப்புரிமையை கூட்டமைப்பிடமிருந்து பறிக்க வேண்டும்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் வலியுறுத்து

(கொழும்பு)

அமெரிக்கா, கனடா உள்ளிட்ட நாடுகளுக்குச் சென்று இலங்கைக்கு எதிரான சூழ்ச்சிகளை மேற்கொண்டுவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பி னர்களுடைய நாடாளுமன்ற உறுப்புரிமை பறிக்கப்பட வேண்டும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் வலியு றுத்தியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கள் அரசியல் யாப்பின் 6 ஆம் அத்தியாயத்திற்கு அமைய நாட்டை பிளவுபடுத்தவோ சர்வதேச சூழ்ச்சிகளுக்கு துணைபோகவோ தேசத்துரோக செயல்களில் ஈடுபடவோ மாட்டோம் என சத்தியப்பிரமாணம் செய்துவிட்டு தற்போது அவற்றை மீறி அமெரிக்கா, கனடா சென்று செயற்படு வதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

சர்வதேச அழுத்தம் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் காட்டிக்கொடுப்புக்கு மத்தியில் எமக்குள்ள சவால் என்ற தலைப்பில் கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

அரசியல் யாப்பை மீறிச் செயற்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் நாடாளு மன்ற உறுப்புரிமை பறிக்கப்பட்டு அவர்கள் மீது விசா ரணை நடத்தப்பட வேண்டும். இதற்கான பூரண அதிகாரம் நாடாளுமன்ற சபாநாயகருக்கு உண்டு. விசாரணையின் பின் அவர்கள் குற்றமற்றவர்கள் என்றால் விடுவிக்கலாம். இல்லாவிடின் தண்டிக்க வேண்டும்.

இன்று சர்வதேத்துடன் சேர்ந்து யுத்தக் குற்ற விசா ரணை வேண்டும் எனக் கோருவது 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்திக் கொள்ளவே. இலங்கை அரசாங் கமும் அதற்கு அடிபணிந்து 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துமாயின் அனைவரும் தற்கொலை செய்து கொள்ள வேண்டிவய அபாய நிலைமையே ஏற்படும்.

13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக நாட்டை கூறுபோடுவதற்கான முதல்படியை எடுத்துவைக்க அவர்கள் திட்டமிட்டுள்ளனர். அதன் பின்னர் லிபியாவில் செய்தது போன்று, கிறிஸ் பூத பீதியின்போது செய்தது போன்று பணத்துக்காக மக்களை ஒன்றுதிரட்டி சிவில் யுத்தம் ஒன்றை ஏற்படுத்த அவர்கள் முயற்சிப்பர்.

அதன் பின்னர் தங்களுடைய பிரிவினவாதக் கொள் கையை நிறைவேற்றிக் கொள்வர். உலக வல்லரசுகளுக்கு அஞ்சாமல் தலைநிமிர்ந்து நின்ற லிபிய தலைவர் கடா பிக்கே மேற்குலகம் மரணம் கொடுத்தது என்றால் எமது நாட்டு மக்கள், தலைவர்களுக்கு அவ்வாறு செய்வதற்கு அவர்கள் தயங்கமாட்டார்கள் எனவும் கூறினார்.

## விஞ்ஞான கூடத்தில் வெடிப்பு ஆசிரியர், மாணவர்கள் உபாதை

(மாத்தறை)

மாத்தறை ராகுல வித்தியாலயத்தின் விஞ்ஞான கூடத்தில் ப்ரோமின் வாயு அடங்கிய கண்ணாடி ரியூப் வெடித்து அதிலிருந்து வெளியேறிய வாயு காரணமாகவும், கண்ணாடித்துண்டுகள் ஏற்படுத்திய காயங்களாலும் ஒரு ஆசிரியை உட்படப் பலர் உபாதைக்குள்ளாகி உள்ளனர்.

இச்சம்பவம் நேற்று இடம்பெற்றது. இவர்கள் அனைவரும் உடனடியாக மாத்தறை பெரியாஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர் இவ்வாறு அனுமதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளதுடன், குறிப்பிட்ட ஆசிரியையும் சுமார் 15 மாணவர்களும் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## கைக்குண்டுத் தாக்குதல் ஒருவர் பலி, 6 பேர் காயம்

(வாதுவை)

வாதுவைப் பகுதியில் பஸ் ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் ஒருவர் பலியானதுடன், ஆறு பேர் காயமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 10.40 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் 28 வயதுடைய சுரங்க பிரியதர்ஷன என்பவரே உயிரிழந்துள் ளார். சம்பவம் தொடர்பில் வாதுவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்

# மருத்துவர் கொலையை அடுத்து கரந்தெனியவில் வன்முறை

## பதற்றத்தைத் தடுக்க ஊரடங்கு

(கொழும்பு)

கரந்தெனிய பொரகெட்டிய பகுதி யில் மருத்துவர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து ஏற்பட்ட வன்முறையைக் கட்டுப்படுத் துவதற்காக ஊரடங்குச் சட்டம் பிறப் பிக்கப்பட்டுள்ளது.

மருத்துவர் ஒருவரைக் கொலை செய்த ஆய்வுகூட உரிமையாளர், இராணுவ அதிகாரி ஆகியோரின் வீடுகள், கடைகள் மீது பொதுமக்கள் மேற்கொண்ட தாக்குதலை அடுத்தே ஊடரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள ளது.

கரந்தெனிய பகுதியில் பொது மக்களால் பெரிதும் மதிக்கப்பட்ட மருத்துவர் பிரசாத் ஜெயசிங்க, கடந்த செப்ரெம்பர் மாதம் 29 ஆம் திகதி இரவு சுட்டுக் கொல்லப்பட்டி ருந்தார்.

மருத்துவ ஆய்வுகூட உரிமையா ளரின் கோரிக்கைக்கு இணங்க, இரா ணுவ கப்டன் ஒருவர் மேலும் இரு படையினரின் உதவியுடன் இந்தக் கொலையைச் செய்துள்ளார்.

ஆய்வுகூட உரிமையாளரும், இரா ணுவக் கப்டனும் நேற்றுமுன்தினம் குற் றப் புலனாய்வு பொலிஸாரால் கைது செய்யப்பட்டதை அடுத்து, ஆத்திரம் கொண்ட பொதுமக்கள் நேற்று கரந் தெனியவில் உள்ள மருத்துவ ஆய்வு கூடத்தையும், வீடுகள், வாகனங்க ளையும் தீயிட்டு எரித்துள்ளனர்.

சுமார் 500 பொதுமக்கள் கரந் தெனிய பொரகெட்டிய பகுதியில் உள்ள ஆய்வுகூடத்தையும், அதன் உரிமையாளரின் வீட்டையும் முதலில் எரித்ததாகவும், பின்னர் எல்பிட்டிய பகுதியில் இராணுவ கப்டனின் வீடு மற்றும் கடையைத் தீக்கிரையாக்கிய தாகவும் தகவல்கள் தெரிவிக்கின் றன.

இதையடுத்து கரந்தெனிய பொலிஸ் பிரிவிலும் குருந்துகஹ - ஹதகம நகரிலும் ஊரடங்கு பிறப் பிக்கப்பட்டுள்ளது.

இங்கு ஏற்பட்டுள்ள பதற்ற நிலை யையடுத்து இராணுவமும், சிறப்பு அதிரடிப்படைக் கொமாண்டோக் களும் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

## பாரத லக்ஷ்மனைக் கொன்றவர் அடையாளம் காணப்பட்டார்

(கொழும்பு)

முல்லேரியாவில் கடந்த எட்டாம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த கொழும்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதியின் தொழிற்சங்க விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகமுமான பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர உட்பட நால்வரின் மரணத்துக்கு காரணமா னவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறிய லில் வைக்கப்பட்டிருந்தவர்களில் ஒரு வர் நேற்று அடையாளம் காணப்பட் டார்.

மீரிஹான பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் கொன்ஸ் டபிளான விதானலாகே அனுர துஷார என்பவரே நேற்று இடம் பெற்ற அடையாள அணி வகுப்பின் போது அடையாளம் காணப்பட்டவரா வார்.

இந்த வழக்கு நேற்றுக் கொழும்பு மேலதிக் நீதிமன்ற நீதவான் பிரசந்த அல்விஸ் முன்னிலையில் விசார ணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவரை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் வைத்து விசாரணை செய்வ தற்காக இரகசியப் பொலிஸாரால் விடுக்கப்பட்ட வேண்டுகோளையும் நீதிவான் ஏற்றுக் கொண்டு அதற்கான அனுமதியையும் வழங்கினார். இந்த வழக்கின் விசாரணை மீண்டும் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு எடுத் துக் கொள்ளப்படவுள்ளது.

## பொது விடுமுறை

(கொழும்பு)

எதிர்வரும் 7 ஆம் திகதி ஹஜ் பெரு நாள் கொண்டாடப்படவுள் ளதை அடுத்து அன்றைய தினத்தை பொது விடுமுறை தினமாக பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ள தாக அரசாங்கத் தகவல் திணைக் களம் தெரிவித்துள்ளது

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 நவம்பர் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.